# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪௧ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௭, கார்த்திகை டிசம்பர், 1966 | பரல் ௪ |
|---|---|---|


# திருவள்ளுவர் கொள்கை மிகுதியும் சைவத்தோடொத்தது

பழந்தமிழ்க் கொள்கையாம் செம்பொருட்டுணிவு எனப்படும் சித்தாந்தசைவம், ஒப்பிலா ஒரு முழுமுதலையே கடவுளாகக் கொண்டு தொன்றுதொட்டு வழிபட்டு வரும் உறுதிக் கொள்கையினையுடையது. மக்கட் பிறப்பெய்தினோர் அனைவரும் ஒரு குலத்தார் என எண்ணும்படி உரைப்பது. தனக்கெனத் தனித்தமிழ்த் திருமாமறைகளையும், திருமாமுறைகளையும் கொண்டு திகழ்வது முப்பொருள் உண்மை செப்புவது. நன்னெறி நாற்படியே முன்னெறியென முழங்குவது. முதல்வன் ஆருயிர்கள் உய்யும் பொருட்டுத் திருவருட்டிருக்கோலம் கொண்டருள்வன் என்பது. அவனே ஆசானாக எழுந்தருள்வன் என்பது. அவன் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தினைச் செவியறிவுறுப்பன் என்பது.

காக்குங்கடவுளை ஆண்பாலாகவும், காக்கப்படும் ஆருயிர்களைப் பெண்பாலாகவும் பேசுவது. திருவடிப்பேறே பெரும்பேறு என்பது. இறைவன் திருவருட் குணங்கள் எட்டென்பது. அவன் திருவாணையினால் இருவினைப்பயன் எய்தும் என்பது, விருப்பால் செய்வது நன்மை; வெறுப்பால் செய்வது தின்மை; எனவே இருவினையும் பிறப்புக்கு வித்தாகிய ஆணவ இருட்சார்பால் நிகழ்வன. அவை மீண்டும் மீண்டும் பிறப்பைத் தருவன. அதனால் அவற்றையொழிக்க அறிவுறுப்பது. அன்பால செய்வது இறைபணி. இறைபணி இயற்றுவோர் முன்னவன்றாட்கு முற்றடிமையாகிய மூதறிஞராவர். அவர் அருளால் ஆணவச்

சார்பகன்று காணவுங் கருதவும் அரிய கண்ணுதற் சார்பெய்திய மெய்யடியாராம் பெரியராவர். அப்பெரியாரைத் துணைக் கோடலே செயற்கருஞ் செய்கையாகும். எனவே அதனைக் கடைப்பிடிக்கக் கட்டுரைப்பது.

இவையும் இவை போன்ற பலவும் திருக்குறளின்கண் தெளியக் காணலாகும். மிகச் சுருக்கமாக இதன்கண் உரைப்பாம்.

சித்தாந்த சைவச்சிறப்பு வருமாறு :

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள்சிவனென் றருளாலே உணர்ந்தறிந்தார்."

—௧௨. சாக்கிய நாயனார்-௫.

திருவள்ளுவர் நற்றமிழ் நாட்டு நல்லார். தமிழர் அறங்களைத் தொகுத்துப் பெரிய அறநூல் ஆக்கினர். தமிழர் அறங்கள் கொலைபுலை யில்லாச் சைவ அறங்களாகும். சைவம் மிகத் தொன்மை வாய்ந்தது. சிவனெனும் செம்பொருளைச் சிறந்த முழுமுதலாகக் கொண்டது. முப்பொருளுண்மை தெளிந்தது. சிவனை நிமித்த காரணனாகக் கொண்டு திகழ்வது. சிவன் தானும் தன்னை விட்டு நீங்காச் சத்தியுமென இரு நிலையுடையன். சத்தி சங்கற்பத்தாலேயே எல்லாஞ் செய்தருள்வன்.

சத்தி ஐ வகைப்படும். அவை பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்பன. இவற்றால் முறையே அருளல், மறைத்தல், படைத்தல், காத்தல், துடைத்தல் என்பன நிகழும். இருள், வினை, மாயை என மலம் மூவகைப்படும். இருளின் சத்தியால் ஆருயிர்களின் அறிவு அறிதியே மறைக்கப் பட்டுள்ளது. அம்மறைப்பை நீக்குவதற்கு வினையின் காரியமாகிய நன்மை தீமைகளுக்கு வேண்டத்தக்க நோக்கமும் ஊக்கமும் மாயையின் காரியமாகிய உடல், உலகு, உலகியற் பொருள்களும் அவ்வுயிர்கட்குக் கடவுளால் ஆக்கி அளித்தருளப் பட்டன. இந்நிலையே படைப்பு நிலை. இருவினையும் நீங்கி இறைபணி நிற்பதே வீடு பேற்றின் முடிநிலையாகும். இதுவே அவாவறுத்தலாகும். உயிர்கள் எண்ணிறந்தன. உலகம் உடல், உடைமை நிலையாமையுடையன. கடவுள் வழிபாட்டால் அவன் திருவடியை அடையலாம். அவ்வழிபாட்டிற்குத் துணை நிற்பது அருளும் அருள் நூலும் அடியார் கூட்டமும்.

இம்முறையில் திருக்குறளை நோக்குவோம். மெய்ப்பொரு ளுண்மை - 35, துறவு - 36, மெய்யுணர்தல்-37, அவாவறுத்தல்.

இவை முறையே பசு, பதி, பாசம் என்பனவாகும். கடவுள் வாழ்த்தில் முதற்றிருக்குறள்:

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே யுலகு".

அகரம் ஏனைய எழுத்துக்களுக்கெல்லாம் நிமித்த காரணமாகும். அது தானே இயங்கும். ஏனைய உயிர், மெய், உயிர் மெய்களுடன் இயைந்து அவற்றையும் இயங்கச் செய்யும். அதனால் அது முதன்மையுடையது. அது போல் "ஆதிபகவன்" உயிர்களையும், மெய்யையொத்த உலகத்தையும், உயிர்மெய்யை யொத்த உயிரோடு கூடி உடலையும் இயைந்து இயக்கியருள் கின்றனன்.

ஆதி என்பது ஆதலைச் செய்யும் சத்தி. பகவன் தன்னி னின்றும் பிரிப்பவன். இஃது "இரவன் மாக்கள்" (புறம் - 333) "அகவன் மாக்கள்" (குறுந்தொகை - 23) என்பனவற்றில் காணப்படும் இரவன், அகவன் என்னும் சொற்களோடு இயைந்த தாகும். இரவன் - யாசிப்பவன். அகவன் - அழைப்பவன். இரவு அன் - இரவன். அகவு அன் - அகவன். இவைபோல் பகவு அன் - பகவன். "எட்பகவன்ன" (889) என்னுங் குறளில் காண்க. எழுத்தோசை நாத தத்துவத்தில் தோன்றுவது. ஆருயிர்களுக்கு உணர்வு நால்வகை வாக்குக்களான் நிகழ்வது. நால்வகை வாக்குக்கள் தூமாயையின் காரியங்கள்.

இவ்வாக்குக்களான் நூல்கள் உண்டாகும். நூல் திருவருளால் மெய்யடியார் வாயிலாக வெளிப்படும். மெய்யடியார்கள் நிறைமொழி மாந்தர் எனவும், நீத்தார் எனவும் பேசப்படுவர். அவர் வாய்மொழியே மறை எனப்படும். அதுவே ஆகமம் எனப் படும். அவ்வுண்மை "கற்றதனால்" என்னுங் குறளில் பேசப்படு கின்றனன். வாலறிவன் - இயற்கையுணர்வினன் முற்று முணர் தலுடையன் எனப்படுவன்". "எண்குணத்தான்" என்னுங் குற ளால் சைவாகமத்து எண் குணங்கள் பேசப்படுகின்றன. சமணர் களும் எண் குணம் கூறுகின்றனர் எனின் கடவுள் நிமித்த காரணன் என்னும் கொள்கை அவர்களுக்கு இல்லை. உலகம் இயற்கை என்பது அவர் கொள்கை. அடிசேர் முத்தி அவர் களுக்குக் கிடையாது. திருவடி சேருமுத்தி, சிவாகமத்துணிவு. இறைவனடி சேர்ந்தார் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்" என்ப தனால் அறியலாம்.

"இருள் சேர் இருவினையும் சேரா" என்னுங் குறளால் இறைபணி பெறப்படும். இருவினையொப்பே இறைபணி. முத்தி யில் இருள்மலவாற்றல் அகன்று அடங்கி நிற்கும். இது சைவக்

கொள்கை. இதனை "விளக்கற்றம் பார்க்கும் இருள்" (1186) என்னும் குறளால் காணலாம். சமணர்க்கு இருண்மலக் கொள்கை கிடையாது. இதுவே பிறப்பிற்கு வித்து. இது பேதைமை எனவுங் கூறப்படும். இதனைப் "பிறப்பென்னும் பேதைமை" (358) என்னுங் குறளில் காணலாம். பிறப்பு நீங்கச் செம்பொருளைக் காணும் அறிவு பெறுதல்வேண்டும். அதே குறளில் "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும், செம்பொருள் காண்ப தறிவு" என்பதனால் உணரலாம்.

சிறப்பென்பது திருவடிப் பேற்றினைக் குறிக்கும். அது தொல்காப்பியத்தில் "சிறந்தது பயிற்றல்' (192) என்பதனாலும் "சிறந்தானை வழிபடஇச் சென்றனள்" (கலி. 9) என்பதனாலும் அறியலாம். வீடுபேற்றினை யருளும் கடவுளைத் திருமுறைகள் சிறந்தானென்று அழைக்கின்றன. "சிறந்தானைத் திருநாகேச் சுரத்துளானை" (6-66-6) என்பது அவற்றுளொன்று.

ஆருயிர்களை ஆட்கொள்ள இறைவன் அந்தணனாய் எழுந்தருள்வன் என்பது சைவக் கொள்கை. அஃது எட்டாவது குறளில் "அறவாழி அந்தணன்" என்னுங் குறிப்பால் பெறவைத்துள்ளனர். அந்தணனும் அருட்குரவனால் ஆட்கொள்ளப் பட்டவர் எவ்வுயிர்மாட்டும் பேரிரக்கம் கொண்டொழுகுவர். அஃது "அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்" (30).

அவர்கள் வழிபடுங் கடவுள் "நீலமணி மிடற்றொருவனுவன்." இக்கொள்கை,

> "பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்" (580)

என்பதனால் நன்கு பெறப்படும். இன்னும் முனிவர் வணங்கும் முக்கட் செல்வராம் சிவபெருமான் ஒருவனுக்கே திருச்சடை முடியுள்ளது. அச்சடை முடியே திருவள்ளுவ நாயனருக்கும் பண்டுதொட்டு அமைந்துள்ளது. அம்முறையிலேயே திருமயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் திருக்கோவிலும் காணப்படுகின்றது. திருவள்ளுவர் பொது மறைக்கண் வெளிப்படையாகத் தங்கொள்கையைக் கூறவில்லை யாயினும் குறிப்பாகத் தம் சமயம் சைவம் எனவே காட்டி யுள்ளனர். அதுவே தமிழ் நாட்டுத் தொன்மைச் சமயம். இவ்வளவும் போதுமானதாகும் என்று எண்ணுகின்றேன். திருவள்ளுவனார் திருவடி வாழ்த்த வரும் பிறப்பே நற்பிறப்பாம் வாழ்த்து.

# மறைமலையடிகள் 16 ஆம் நினைவு விழாவும் 'மழை வேண்டல்' நூல் வெளியீட்டு விழாவும்

தனித்தமிழ் வித்தகர் தவத்திரு மறைமலையடிகளாரின் 16 ஆம் நினைவு விழாவும், 'மழைவேண்டல்' என்னும் நூலின் வெளியீட்டு விழாவும் 27-11-'66 அன்று மாலை சென்னை மாவட்ட மத்திய நூலகக்கட்டடத்தில் நடைபெற்றது. விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்தித்தந்தவர் சித்தாந்தச் செம்மல் திரு. க. வச்சிரவேலு முதலியார், பி. ஏ., எல். டி. ஆவர். 'மழை வேண்டல்' என்னும் நூலைப் பாங்குறப் பாராட்டி வெளியிட்டவர் தமிழக அரசின் வேளாண்மைத்துறையின் செயலரும் தமிழ் ஆராய்ச்சி, வளர்ச்சிக் குழுவின் நெறியாளருமான திரு. வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ். ஆவர்.

விழாவில் கலந்து கொண்டு அடிகளாரின் பல்துறைப் பணி களைப் பற்றிப் பாராட்டிப்பேசிய அறிஞர்கள் பண்டித ஞா. தேவ நேயன், திரு. அகிலன், திரு. சு. நடராச பிள்ளை, திரு. கவிஞர் சுரதா ஆகியோர். திருமுறை இசைவாணர்களான திரு. கூத்தர சும் திரு. பாலசுந்தரமும், 'மழை வேண்டல்' பாடல்களை இசை யுறப் பாடினர்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசியவர் கழகப் புலவர் திரு. ப. இராமநாத பிள்ளை ஆவர். அவர் தம் வரவேற்புரையில் அடிகளின் சிறப்பைப் பற்றிக் கூறு கையில் "சிலர் பேசுவதில் வல்லராயிருப்பர். ஆனால் எழுத்தாற்றல் பெறாதவராயிருப்பர். மாறாக எழுத்தாற்றல் பெற்றவர் பேச் சாற்றல் பெறாதிருப்பர். அந்த இரண்டு வகை ஆற்றல்களும் மறைமலையடிகளிடம் இருந்தன. அதனால் அவர் பேச்சினால் மக்களைக் கவர்ந்ததோடு பலப்பல நூல்களையும் எழுதிவைத்து விட்டுப் போயுள்ளார்கள். அவருடைய நினைவை நாம் உண்மை யில் நினைவு கூரும் வகை அவர்தம் கருத்துக்களை எல்லாரிடமும் பரப்புவதுதான்.

"அடிகளாரின் இல்லம் பல்லாவரத்தில் உள்ளது. அங்கு அடிகள் வழிபட்ட கூத்தப்பிரான் இன்றும் நடனமிடுகின்றார். அடிகள் நால்வர் வழியில் நின்று வழிபாடு புரிந்தவர். தமிழும் சைவமும் தம்மிரு கண்களெனக் கொண்டவர். அவர் நினைவை நாம் கொண்டாடும் பொழுது அவர் தம் கண்களெனப் போற்றிய தமிழையும் சைவத்தையும் பரப்புவதற்கு வேண்டியவற்றைச் செய்தல் வேண்டும்" என்று கூறி அனைவரையும் வரவேற்றார்.

அடுத்து, திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். "இரண்டு நல்ல சைவர்களைப் பற்றிப் பேச நாம் இங்குக் கூடியுள்ளோம். முதல்வர் மறைமலையடிகள், இரண்டாமவர் மறை வேண்டல் பாடல்களைத் தொகுத்து வெளியிட முன் வந்துள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்.

"1920-25 இல் கல்லூரியில் படித்த காலமுதல் மறைமலையடிகளாரை யான் நன்கு அறிவேன். அவர் தமிழுக்கு ஓர் எல்லையாகத் திகழ்ந்தவர். நூல்களைக் கற்றதோடு ஆராய்ச்சியும் செய்தவர். பழைய நூல்களில் இன்னின்னவற்றை இவ்வாறு இவ்வாறு கொள்ள வேண்டும் என்று வரையறை செய்தவர். தமிழ் தனித்து இயங்க முடியாது என்ற எண்ணம் இருந்த காலத்தில் தாம் தனித்து நின்று தாம் அறிந்த உண்மையை உள்ளவாறு எடுத்துச் சொன்னவர் அடிகள். வடமொழி கலந்து எழுதினால் மொழியின் வளம் குன்றிவிடும் என்ற நோக்கம் கொண்டவர் அவர்.

"சைவம் தமிழரின் சிறந்த நெறி என்ற அடிப்படைக் கொள்கையைச் சான்றுகளோடு எடுத்துக் காட்டிய பெருமை அடிகளையே சாரும்.

"மறைமலையடிகள் முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி போன்ற சிறந்த ஆராய்ச்சி நூல்களைப் படைத்துள்ளார். அவர் தம் நூல்களுக்கு ஆங்கிலப் பேரறிஞர்களைப் போல நீண்ட, பயனுடைய ஆராய்ச்சி முன்னுரைகளை எழுதியுள்ளார்.

"அடிகளாரின் ஆராய்ச்சி நூல்கள் பல. அவற்றுள் சிறந்த நூலாகக் கொள்ளக் கூடியது மாணிக்கவாசகரின் வரலாறும் காலமும் என்பதாகும். கல்வெட்டுக்கள் முதலியவற்றை ஆராய்ந்து மேற்கோள் காட்டி மணிவாசகரின் காலத்தை நிறுவுவதைப் பார்க்கும்பொழுது இவரல்லரோ பெரிய சைவர் என்று கூறத்தோன்றுகிறது. அவருடைய உரை நடை சிறந்த நுணுக்கமுடையது. உரை நடையில் சிறந்தன பரிமேலழகர் உரை, சேனாவரையர் உரை, இறையனார் களவியலுரை போன்றவை. அவற்றைப் படித்து உணர்ந்த அடிகள் அவை போலவே இன்பம் பயக்கும் வகையில் தெளிவும் எளிமையும் கலந்த உரை நடையில் நூல்களை இயற்றியுள்ளார்.

"அடிகளாரின் புகழைப் பற்றிப் பலர் பேச இருக்கிறார்கள். அவர்களுடன் கலந்து உரையாட வாய்ப்பளித்த சுப்பையா பிள்ளை அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்."

மறைமலையடிகளாரின் பல் துறைப் பணிகளைப்பற்றிப் பாராட்டி திரு. ஞா. தேவநேயப்பாவாணர் பேசினார். "ஆண்டுக்கொரு முறை அடிகளை நினைவு கூர்வதற்குரிய வாய்ப்பினைச் சைவசித்தாந்தக் கழகம் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. தமிழர்கள் மறைமலையடிகளோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும்.

"தமிழ் சிறந்தமொழிதான். அஃது எப்போதும் நிலைத்திருக்க வேண்டுமென்றால் நாம் அதை வழங்கிக்கொண்டேயிருக்க வேண்டும். உயிருள்ள மொழிகள் என்பன அம்மொழி பேசும் மக்களின் குழந்தைகள் பள்ளி சென்று கற்பதற்கு முன்னரே வீட்டில் பேச்சு மூலமே அறிந்து கொள்ளும் மொழிகள் ஆகும். இறந்து போன மொழிகள் என்பன குழந்தைப் பருவததில் இயல்பாய்க் கற்காது பாடப்புத்தகத்தின் மூலம் மட்டுமே அறிந்து கொள்ளும் மொழிகளாகும்.

"தமிழ் பழைமையான மொழி, தானே தோன்றிய மொழி, அத்துடன் வளம் பொருந்திய மொழி. கிரேக்கம், இலத்தீன். போன்ற மொழிகளிலெல்லாம் தமிழ்ச் சொற்களிருக்கின்றன. ஆரியர்கள் வருவதற்கு முன்னரே வளம் பெற்றிருந்த மொழி. ஆரியர்களின் வருகையை மிக முற்பட்ட காலத்திற்குத் தள்ளிக் கொண்டு போகிறார்கள் வடநாட்டு வரலாற்றாசிரியர்கள். தம்பியின் வயதைக் கூட்டிக் கொண்டே போனால் அண்ணனின் வயதும் அதற்குத் தக்கவாறு கூடிக் கொண்டே போகும் என்ற உண்மையை அவர்கள் உணரவில்லை. ஆரியர் தமிழகத்திற்கு வந்த காலத்தை அவர்கள் முற்பட்ட காலத்திற்குத் தள்ளத் தள்ளத் தமிழின் தோற்றக் காலமும் அதைவிட முற்பட்டே செல்லும். ஏனெனில் தமிழ் ஆரியர் வருவதற்கு முன்னரே வளம் பெற்றிருந்த மொழியாகும்."

"நீண்ட காலமாகத் தமிழில் அயல்மொழிச் சொற்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை அகற்றியவர் மறைமலையடிகள். அடிகள் காலத்தில் தமிழ் தாழ்ந்த நிலையில் இருந்தது. அடிகள் இல்லாவிட்டால் தமிழ் இன்று இந்நிலையை அடைந்திருக்க முடியாது. அவர்கள் இறந்து போகவிருந்த தமிழைத் தமிழாக்கிக் கொடுத்தார்கள். அவர்களை நினைவு கூர்ந்து கொண்டு என்னுரையை முடிக்கின்றேன்."

'மழை வேண்டல்' நூலிலிருந்து பெருமழைப் புலவர் இயற்றிய அம்மானைப் பாடல்களை திருமுறை இசைவாணர்களான திரு கூத்தரசும் திரு. பாலசுந்தரமும் இசையுறப் பாடினர்.

'மழை வேண்டல்' நூலை வெளியிட்டு வேளாண்மைத் துறைச் செயலர் திரு. வி. கார்த்திகேயன் ஐ. ஏ. எஸ். அடுத்து

உரை நிகழ்த்தினர். "மழை பொய்த்துப்போன ஒரு காலத்தில் திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் இந் நூலைத் தொகுத்து வெளியிடும் முயற்சியை மேற்கொண்டார்கள். ஆனால் இடையில் மழை போதும் போதும் என்னும் அளவிற்குப் பெய்து விட்டது. இந் நூலில் மழை போதும் என்று கூறும் மழை நிறுத்தப் பாடல்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. இந்நூல் காலத்துக் கேற்ற குறிப்புடைய நூல். இதைத் தமிழ்த் திறை நெறியாளர் என்பதைவிட வேளாண்மைத் துறையாளர் என்ற முறையில் தான் என்னைக் கொண்டு வெளியிடச் செய்துள்ளார்கள். இக்காலத்துக்கேற்றது. படித்துப் பயன் பெறுங்கள் என்ற முறையில் நூலை உருவாக்கியுள்ளார்கள்.. முற்காலத்தில் வாழ்ந்த நால்வர் முதல் இன்று வாழும் அருட்கவி, கிருபானந்தவாரியார் வரை எல்லாருடைய பாடல்களையும் தொகுத்துள்ளார்கள். பாடல் முறையும் சித்தாந்தத் தொடர்பு முறையும் பிறழாத வண்ணம் தொடர்பு அறுத வகையில் எல்லாப் பாடல்களையும் தொகுத்துள்ளார்கள்.


"இறைவனை வேண்டினால் எல்லாவற்றையும் பெறலாம் என்ற நோக்கத்துடன் தொகுக்கப்பட்ட பாடல்களே இவை. நம்பிக்கை உள்ளவர்கள் இவற்றைப் படித்துப் பயன் பெறலாம். மேலை நாடுகளிலும் இத்தகைய கருத்துக்கள் உள்ளன. மழை பெய்வதற்காக அதற்குரிய சடங்குகளைச் செய்வதும் இன்னும் மேலை நாடுகளிலும் காணப்படுகின்றது."

"நம்பிக்கையிருந்தால் தான் பக்தி, அது இருந்தால் தான் திருமுறைப்பாடல்கள். இல்லையேல் அரும்பெருஞ் செல்வமான திருமுறைப் பாடல்கள் பயனற்றுப் போகும். எனவே இந்நூலை நம்பிக்கையோடு படித்துப் பலரும் பயன்பெற வேண்டுமென்பது என் அவா."


சிறந்த புதினங்களும் சிறு கதைகளும் எழுதியுள்ள திரு அகிலன் அடுத்து மறைமலையடிகளின் மாண்பினைப் பற்றிப் பேசினர். அவர் பேசியது; "மறைமலையடிகள் தூய தமிழைப் புயலின் வேகத்தில் தமிழகத்தில் பரப்பியவர். அடிகள் விழாவில் தூய தமிழில் பேசாதவர்கள், எழுதாதவர்கள் பேசுவதற்கு அச்சமூட்டும் வகையில் இன்று பரவியுள்ள அச்சமே அடிகளின் பெருமைக்குச் சான்றாகும். மறைமலையடிகள் மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை. புரட்சிக்காரர்."

"தனித்தமிழ் உணர்ச்சி சென்ற நூற்றாண்டில் பரவி வந்தது. பிரதாப முதலியார் சரித்திரம் எழுதிய வேதநாயகரும், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரும் தனித்தமிழ் உணர்ச்சியைப் பெற்றிருந்தார்களே தவிரச் செயலில் சிறிதளவுதான் காட்டினர்


# மறைமலையடிகள் 16ஆம் நினைவு விழா



சித்தாந்தச் செம்மல் திரு. க. வச்சிரவேலு முதலியார்
தலைமையுரை யாற்றுதல்



தமிழக வேளாண்மைத்துறைச் செயலர் திரு. வி. கார்த்திகேயன்,
ஐ. ஏ. எஸ். 'மழை வேண்டல்' நூலை வெளியிட்டு உரையாற்றுதல்



பண்டித ஞா. தேவநேயப் பாவாணர் உரை நிகழ்த்துதல்

மறைமலையடிகள் நூல் நிலையம்



டாக்டர் மு. அறம் அவர்கள் வருகை

கள். மறைமலையடிகள் தாம் முதன் முதலில் தனித்தமிழ் உணர்ச்சியை முழு அளவில் செயல் படுத்திய வீரர். அவர் தோற்றுவித்த ஒரு புரட்சி அவருக்குப் பின் எழுந்த எழுத்தாளர்களின் நடையில் பெருமாறுதலை உண்டுபண்ணியது. அவர் காலத்தில் பிறர் எழுதிய நடைக்கும் இன்று நாமெல்லாம் எழுதும் நடைக்கும் எவ்வளவோ வேறுபாடு உள்ளது. இந்த வேறுபாட்டுக்கு வித்திட்டவர் மறைமலையடிகள்.

"மணிப்பிரவாள நடை தூய தமிழ் நடையை அழித்து விடாது காப்பாற்றியவர் மறைமலையடிகள். அவர் பிறமொழிச் சொற்கள் தமிழில் புகுவதைத்தான் எதிர்த்தாரே தவிரப் பிற மொழி இலக்கியங்களை வெறுக்கவில்லை. அவருடைய குமுத வல்லியும் சாகுந்தல நாடகமுமே இதற்குச் சான்று."

"பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவது பெருங்குற்றச் சாட்டுக்குரியது என்று கருதக் கூடாது என்று மட்டும் நான் கேட்டுக் கொள்கிறேன். வரலாற்றுச் சூழலுக்குட்பட்டு அவ்வாறு நடை உருவாகின்றது. அதில் எதிர் நீச்சல் போட்டவர் அடிகள்.* பிறமொழிச் சொற்களை வேண்டுமென்றே புகுத்துபவர்கள் சிலர் இருக்கின்றனர். அவர்கள் குற்றச் சாட்டுக் குரியவர்கள் தாம். ஆனால் காலப் போக்குக்கு ஒட்டி எழுதுபவர்களைக் குற்றக்கண் கொண்டு நோக்கக் கூடாது என்று மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்."

கோவை நகராட்சியில் கல்வித் துறை அதிகாரியாகப் பணி யாற்றி ஒய்வு பெற்றவரும் தற்பொழுது கழகச் செயற் குழுவில் உறுப்பினராக உள்ளவருமான திரு. சு. நடராச பிள்ளை அடுத்து அடிகளைப் பாராட்டிப் பேசினார். "தமிழ் மொழியை யாரும் அழிக்க முடியாது. காரணம் ஆன்ம உணர்ச்சியே. அறிவியல் மட்டும் மனித வாழ்வுக்குப் போதாது. ஆன்ம உணர்ச்சியும் வேண்டும். ஆரியத்தால் தமிழை அழிக்க முடியாததற்குக் காரணம் தமிழர்களின் ஆன்ம உணர்ச்சியே.

"மேனாட்டுப் பாதிரியார்கள் தமிழைக் கற்றுத் தமிழ் மொழிக்கே புத்துயிரளித்தார்கள். சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த தமிழறிஞர்கள் பலர் தமிழுக்குப் பெருமையூட்டினர். அந்த வகையில் மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்துத் தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தை விளைவித்தார்கள்."

"இந்தி மொழியை எதிர்ப்பதற்கு 1937 இல் மறைமலையடிகள் 'இந்தி பொது மொழியா?' என்ற நூலை எழுதினார்கள். அந்நூல் ஆயிரக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பப்பட்டது. இந்தி

மொழி ஆட்சி மொழியாவதற்குரிய தகுதியை இன்னும் பெற வில்லை. அதன் வளர்ச்சிக்காக அரசினர் பல்லாயிரக்கணக்கில் செலவிட்டு வீணாக்குகிறார்கள்.

"மறைமலையடிகள் இனிமையான குரலில் பாடுவார்கள். உண்மையில் சொல்லின் செல்வர் அவர் தாம். அந்தப் பேச்சாற் றலின் மூலம் தான் அடிகள் தனித்தமிழ் இயக்கத்தை வளர்த் தார். அடுத்து அவர் சமயத்துறையில் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. அவர் ஆழ்ந்த சமயப் பற்றுடையவர். சமய மில்லாமல் வாழ்ந்து விடலாம் என்று இன்று பலர் நினைக்கிறார் கள். இது தவறு. சமயப்பற்றுதான் ஒழுக்கத்தை வளர்க்கும்.

"தமிழின் பெருமையையும் தமிழனின் பெருமையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால் அடிகள் நூல்களனைத்தை யும் அனைவரும் கற்க வேண்டும்."

இறுதியாகக் கவிஞர் சுரதா அடிகளின் தொண்டைப் பாராட்டி அடிகள் மொழியில் மட்டுமன்றி அரசியலிலும் பங்கு ஏற்றுக் கொண்டதால்தான் இராமலிங்க அடிகளும் தண்ட பாணி சுவாமிகளும் பெறாத புகழ் அவருக்குக் கிட்டியது. என்றும், எழுத்தாற்றல், பேச்சாற்றல் அனைத்தும் அடிகளார் கொண்டு விளங்கினார் என்றும், அவரில்லையேல் தமிழருக்கு விழிப்பு ஏற்பட்டிருக்காது - அந்த வகையில் அவர் நமக்கு முன்னோடியாக விளங்குகிறார் என்றும், அவரிடமிருந்து நாம கற்றுக் கொள்ள வேண்டியன நடையில் ஒழுக்கம், செயலில் ஒழுக்கம், பேச்சில் இனிமை, நினைவாற்றல் போன்ற நற்பண்பு களே என்றும், வடக்கிலிருந்து வந்த விவேகானந்தருக்கு இங்குச் சிலை வைக்க ஏற்பாடு செய்துள்ளோம். ஆனால் நம் மறைமலையடிகளுக்கு இங்குச் சிலை இல்லை; இது வெட்கப்பட வேண்டிய நிலை. கடற்கரையோரத்தில் விரைவில் அடிகளுக்குச் சிலையொன்று வைக்கவேண்டும் என்றும் விளக்கமாகப் பேசினார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் மறைமலையடிகள் நூல்நிலைய நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி நன்றி கூற விழா இனிது முடிந்தது.

மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு

## டாக்டர் மு. அறம் வருகை தந்தார்

கோவை, அவிநாசிலிங்கம் கிராமியக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியபின், தற்பொழுது உலக அமைதிப் பேரணியின் ஆசியப் பகுதிக்குச் செயலாளராகப் பணியாற்றி வரும் டாக்டர். மு. அறம் அவர்கள், நூலகத்திற்கு 19-11-66 அன்று வந்து பார்வையிட்டார். அண்மையில் அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அன்னை சொர்ணம்பாள் நினைவுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். உலக அமைதிக்குத் திருக்குறள் எவ்வகையில் பயன்படும் என்று பேசினர். நூலகத்தைப் பார்வையிட்டபின் பாராட்டுரை யேட்டில் அவர் எழுதியுள்ள கருத்து:—

"மறைமலையடிகளாரது நூல் தொகுப்பினைக் கண்டு மகிழ்ந்தேன். திருக்குறளை யொட்டிய பல அரிய நூல்களைக் கண்டும் மகிழ்ந்தேன். திருக்குறள் இது வரை வெளிவரா ஆசிய, ஐரோப்பிய மொழிகளில் வெளிவரல் வேண்டும். இதற்கான பணியில் கழகம் ஈடுபட்டால் நன்றாக இருக்கும். கழகத்தின் பெரும்பணியினைப் பல ஆண்டுகளாக நான் அறிவேன். இன்று நேரில் வந்து யாவற்றையும் காண வாய்த்தது பற்றி மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். இவ்வாய்ப்பினைத் தந்த திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி."

---

## மறைமலையடிகளார் மணிமொழிகள்

அழகு என்பது யாது? தூய நினைவாலுந் தூயமொழியாலுந் தூய உணவாலும் தூய செயலாலுந் தூய உறையுளாலும் உண்டாகும் ஒளியும் திருந்திய அமைப்புமே யன்றோ?

—மக்கள் நூறுண்டு உயிர் வாழ்தல் II, பக். 359.

தன் மனச் சான்றுக்கு மாறுபாடில்லாமல் நடக்கையில் ஒருவனிடத்தில் அச்சம் நிகழாது; தான் நீதி நெறி வழுவாமல் ஒழுகும் வரையில் ஒருவன் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை.

—யோக நித்திரை அல்லது அறிதுயில், பக். 30.

கொடுமையும் சினமும் இல்லா அமைதியுடையார்க்கே ஆற்றலும் அறிவும் மிகுதிப்பட, அவர்களே தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டொழுகுவர்.

—பொருந்தும் உணவும் பொருந்தா உணவும், பக். 94-95.

---

# தமிழ் - பிராமி வரிவடிவம்

[நுண்கலைச் செல்வர் திரு. அ. இராகவன்]

*சென்னை மாநில அரசாங்கத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் 8-10-1966 இல் இராசாசி மண்டபத்தில் நடத்திய தமிழகக் கல்வெட்டுக் கருத்தரங்கில், மாலை 5 மணிக்குப் பேராசிரியர் கே. எ. நீலகண்ட சாத்திரியார் தலைமையில் நடைபெற்ற "தமிழ் - பிராமி சாசனங்கள்" என்னும் ஆராய்ச்சிப் பகுதிக்குப், பாளையங்கோட்டை நுண்கலைச் செல்வர் திரு. அ. இராகவன் அவர்களால் "தமிழ் பிராமி வரிவடிவம்" என்னும் ஓர் அரிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று அனுப்பப்பட்டது. அதைச் சிலவிடங்களில் சுருக்கியும் சில விடங்களில் விரிவாக ஆராய்ந்தும் வெளியிடப்பட்டுள்ளது.*

தமிழ் மொழியும் தமிழ் வரிவடிவங்களும் மிகத் தொன்மை யானவை என்று எண்ணப்பட்டு வருகிறது. ஆனால் அவைகள் என்று? எவ்வாறு? தோன்றினது என்று நன்கு ஆராயப்பட வில்லை. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மேனாட் டறிஞர்கள் தமிழ் வரிவடிவங்களைப் பற்றிய ஆராய்ச்சியைத் துவங்கி வைத்தனர். ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலே தமிழகத்தில், அரசாங்கம் கல்வெட்டு ஆராய்ச்சித் துறைக்கு[1] அடிகோலியது. அதன் பலனாகக் கல்வெட்டு, செப்பேடு முதலியவைகளில் பொறிக்கப்பட்ட வரிவடிவங்களை வாசிக்கும் எழுத்தியல் ஆராய்ச்சித் துறை[2] என்ற ஒரு புதிய படிப்பு முறை நமது நாட்டில் எழுந்தது. இத் துறைகளைப் பற்றி ஆங்கிலத்தில் சில ஆராய்ச்சி நூற்களும் வெளிவந்தன.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வரிவடிவ ஆராய்ச்சி அரும்பிய தொடக்க காலத்தில் பிராமி எழுத்துக்களே மிகத் தொன்மை வாய்ந்தவைகள் என்று எண்ணப்பட்டது. இதினின்றே தமிழ் வரிவடிவங்கள் பிறந்தன என்று முடிபுகட்டப் பட்டது. இற்றைக்கு 44 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் உள்ள சிந்து சமவெளியில் உள்ள அரப்பா, மொகெஞ்சதாரோ முதலிய இடங்களில் அகழ்ந்து கண்ட முத்திரைகளில் திகழும் சித்திர எழுத்துக்களே மிகத் தொன்மையானவை என்று காணப்பட்டுள்ளது. இந்த ஓவிய எழுத்துக்களோ ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டன என்று முடிபுகட்டப் பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்தில் கண்ட ஓவிய எழுத்துக் களே இந்தியாவில் உள்ள எழுத்துக்களில் (வரிவடிவங்களில்)

---

1. Epigraphic Department. 2. Paleography.

மிகமிகத் தொன்மையானவை. இந்தியாவில் உள்ள எல்லா வரிவடிவங்களுக்கும் அடிப்படையான தாய் உருவமும் ஆகும். நாட்டில் வரலாற்று உணர்வு அரும்புங் காலத்தில் பிராமி நெடுங் கணக்கு நிலையை எய்தி இருக்கலாம் என்று அறிஞர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் அஃது அந்நிலையை எப்பொழுது எய்தியது? என்று திட்டவட்டமாக எவரும் இதுவரை கூறவில்லை. பிராமியின் தென்னாட்டு அமைப்பைத் திராவிடி என்று அறிஞர்கள் சிலர் கூறுகின்றார்கள்.

சிந்து வெளியின் முந்திய நாகரிகம் உலகில் உந்துவதற்கு முன் அசோகனுடைய கல்வெட்டுக்களில் காணப்பட்ட பிராமி வரிவடிவம் மிகப் பழைமையானது; இந்திய வரிவடிவங்களின் தாய் என்று எண்ணப்பட்டது. பல்வேறு பிராகிருத வடிவங்களில் வரையப்பட்ட அசோகனுடைய கல்வெட்டுக்கள் இன்று இந்தியாவில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. இந்த வரிவடிவங்கள் நாளடைவில் நமது நாட்டில் பல்வேறு நிலைகளில் வளர்ந்தும் கிளர்ந்தும் திரிபுற்றும் திகழ்கின்றன.

முன்னர் அசோகனுடைய பிராமி எழுத்துக்களுக்கு முன்னுள்ள—அஃதாவது கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னுள்ள எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்படாதிருந்தன. ஆனால் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் நாட்டுக் கல்லறைகள் சிலவற்றில் கண்டுபிடிக்கப்பட்ட ஓடுகளில் சில கி. மு. மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு முன் உள்ளதாகக் காணப்படுகின்றன. அதோடு சில குகை எழுத்துக்களும் மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக முடிபு கட்டப்பட்டுள்ளன.[1] ஆனால் அவையெல்லாம் இதுவரை நன்கு ஆராயப்படவில்லை. அதில் காணப்படும் குறியீடுகள் பழங்காலக் காசுகளில்கூடக் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

அசோகனுடைய பிராமி எழுத்துக்களுக்கும் பழம் பெரும் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் மேற்போக்காகப் பல ஒற்றுமைகள் உள்ளன. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ள முத்திரைகளில் உள்ள குறியீடுகளில் சில பிராமி வடிவங்களைப் போலக் காணப்படுகின்றன. ஆனாலும் இவைகளைப் பற்றி இன்னும் நன்றாக ஆராயவேண்டியதிருக்கிறது. இதில் பல சிக்கல்களும் சிரமங்களும் உள்ளன என்பது நமக்கு நன்கு தெரியும்.

1. "When these inscriptions are compared with the Asoken edicts(though Asoka in the 3rd century B C. adopted Pali Language the script employed by Asoka seems to be but a sophisticated variety of the Tamil Nad Cave Script"—Script in and around India—V. Kannaiyan B. A. (Introduction) Page 3 (Madras) 1960.

பிராமி எழுத்துக்கள் சிந்துவெளி எழுத்துக்களினின்று பிறந்து, ஒரே நிலையில் நில்லாது, பல்வேறு வகையாகத் திரிபுற்று, கிளைத்து நாளடைவில் பெரும் மாற்றம் பெற்றுள்ளன.

அசோகன் கண்ட பிராமி எழுத்துக்கள் அசோகன் பிராமி என்ற நிலையில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் பீடுற்றுப் பல்வேறு சாசனங்களைப் பெற்றுச் சிறப்பெய்தியது. கி. மு. முதல் நூற்றாண்டில் பிராமி குசான் பிராமியாகத் திரிபுற்று எழுந்தது. கி. பி. 4 ஆம் நூற்றாண்டில் அது குப்தப் பிராமியாகக் கிளைத்தது. கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் சித்த மாத்திரிகா பிராமியாக மாறுதலுற்றது. இறுதியாகக் கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் நாகரி வரிவடிவமாகவும் குடிலா வரிவடிவமாகவும் மலர்ந்தது. இதுவே வங்கம், மைதிலி, அசாமி, நெவாரி, ஒரியா, காசுமீரி முதலிய மொழிகளின் வரிவடிவங்களுக்குத் தாயாக இருந்தது. மேலும் கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியுற்ற பல்லவர்களின் வரிவடிவங்களாகவும் பரிணமித்தது. பிராமியே தமிழ், மலையாளம், சிங்களம், ஆந்திரம், கன்னடம், கிரந்தம் ஆகிய மொழிகளின் வரிவடிவங்களுக்கு மூலக் கருவாக இருக்கிறது.

டாக்டர் புஃலர் என்னும் அறிஞர் வட்டெழுத்து பிராமியினின்று பிறந்தது என்றும் இதை ஒரு தனிவகையாகக் கருதாது தமிழின் திரிபே என்றும் கருதுகின்றார்.[1] இதனால் வட்டெழுத்து, திட்டவட்டமாகத் தனியே வளர்ச்சிபெறாது தமிழின் திரிபாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. சிலர் இவ்விருவகை எழுத்துக்களும் தனித்தனியாக வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்று கருதுகின்றனர். இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முன் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களோ, செப்பேடுகளோ அதிகமாகத் தமிழ் வளர்த்த தண்பாண்டி நாட்டில் கூடக் கிடைக்கவில்லை. சோழர்கள் ஆதிக்கம் பரவாத மலைநாட்டில் கூட வட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன. இதனால் வட்டெழுத்து பிராமியினின்று தனியாகத் தளிர்த்துப் பாண்டிய நாட்டிலும் அதையடுத்த மலைநாட்டிலும் வழங்கிய வரிவடிவமாகக் காணப்படுகிறது என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

பிராமி வடபிராமி, தென்பிராமி என்று இருவகைப்படும். தென்பிராமி சிந்துவெளியில் கண்ட குறியீடுகளினின்று பிரிந்து திராவிட மொழிகளின் வரிவடிவங்களுக்குத் தாயாக இருக்கிறது

1. Indian Paleography - Dr. Buhler (English edition) Published as appendix to the Indian Antiquary. Vol. XXXIII.

என்று கருதப்படுகிறது. இதைத் திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைத்த மட்பாண்டங்கள் மீது பொறிக்கப்பட்ட வரிவடிவங்களும் நீலகிரியில் கிடைத்த கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.[1] வடபிராமி ஆரிய மொழிகளின் வரிவடிவங்களுக்கு அன்னையாக அமைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அசோகன் கண்ட பிராமி வடபிராமியின் மூலத்தையுடையது என்று எண்ணப்படுகிறது. வடபிராமியும், தென்பிராமியும் சிந்துவெளியின் குறியீடுகளினின்று திரிந்தவைகளாய் இருந்தாலும் வடபிராமி மூலத்தினின்றும் பெறும் மாறுதலையுடையதாய்த் திகழ்கிறது. அறிஞர்கள் சிலர் சிந்துவெளிக் குறியீடுகளுக்கும் பிராமிக்கும் சங்கிலித் தொடர்பு போன்ற இணைப்புக்கள் காணப்படவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் இவை இரண்டிற்கும் மத்திய நிலையில் காணப்படும் பட்டயம் ஒன்று மத்திய இந்தியாவில் உள்ள விக்கிரமகோல் என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எனவே சிந்துவெளிக் குறியீடுகளே பிராமியின் மூலவடிவம் என்று உறுதியாக எண்ணப்படுகிறது.[2]

சிந்து வெளியின் சித்திர எழுத்துக்களே பண்டையத் திராவிட மக்களின் முன்னோர்கள் கண்ட வரிவடிவங்களின் மூலக்கருவாக இருக்கிறது என்று முடிபுகட்டப்பட்டுள்ளன. அவை திராவிட மொழிகளுக்கெல்லாம் அமைக்கப்பட்ட பழைய எழுத்துக் குறியீடுகளாக இருக்கின்றன, என்று வரலாற்றுப் பேறிஞர் இராசு அடிகள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.[3]

கிறித்தவ ஆண்டு அரும்புவதற்கு 1200 ஆண்டுகளுக்கு முன் நிலவிய பினிசிய வரிவடிவங்களினின்று பிராமி பிறந்திருக்கலாம் என்று அறிஞர்கள் சிலர் கூறினர். பபிலோன் வழியாக பினிசியனில் இருந்து பிராமி தோன்றியிருக்கலாம் என்று சிலர் எழுதியுள்ளனர்.

கி. மு. 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் - அஃதாவது பைபிளில் கூறப்படும் சாலமோன் ஞானி காலத்தில்[4] பினிசியர்கள் தமிழ் நாட்டோடு (திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரி என்னும் துறைமுகத்தோடு) தொடர்பு கொண்டு வணிகம் வளர்த்து வந்தனர். கி. மு. 10 ஆம் நூற்றாண்டிற்கு மத்தியில் அல்லது அதற்குச் சற்றுமுன் கடல்வழியாகப் பபிலோனுக்குச்

1. Ibid pp. 101-103. 2. Indian Antiquary Vol. 62.

3. Rev. Fr. H. Heras's Articles in the New Review Vol, II p. 1-16 1936.

4. Bible - 1 Kings chap. 10. V. 23.

சென்றுவந்த பாரத நாட்டு வணிகர்கள் அங்கு எழுத்து எழுதும் வழக்கம் இருப்பதைக் கண்டு அதைத் தம் நாட்டிற்குக் கொண்டு வந்தனர். எளிய பினிசிய எழுத்துக்களைத் தங்கள் வலிய பிராகிருதத்திற்கு ஏற்ற எழுத்துக்களாக மாற்றி அமைத்துக் கொண்டனர். இவ்வாறு பிராமி வெளி நாட்டினின்று இந் நாட்டிற்குக் குடிபுகுந்த எழுத்துக்கள் என்று சிலர் கூறு கின்றனர். [1]இஃதின்றிப் பினிசிய மொழியின் தென் அராபி வரிவடிவத்தினின்று பிராமி பிறந்திருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். கி. மு. 9ஆம் நூற்றாண்டிற்குமுன் பிராமி உள தென்றும் இவ்வகை எழுத்துக்கள் பினிசியாவில் உள்ள மோப் நகரில் ஆட்சி புரிந்த அரசனுடைய கி. மு. 850ஆம் ஆண்டின் பட்டயத்தில் காணப்படுகின்றன என்றும் பினிசிய வணிகர்களிட மிருந்து இந்திய மக்கள் எழுத்து அமைக்கும் முறையை அறிந்தார்கள் என்றும் வரலாற்றறிஞர்கள் சிலர் வரைந்துள்ளனர். ஆனால் இந்த முடிபுகளையெல்லாம் சிந்து வெளியிற் கிடைத்த சிறிய சான்றுகள் மாற்றி அமைத்து விட்டன. பிராமி இந்தியாவிலே பிறந்தது. இந்தியாவிலே வளர்ந்தது. இந்தியா விலே ஈன்றது. சிந்து வெளிக் குறியீடுகளைத் தாயாகக் கொண்டது என்று பேரறிஞர்கள் ஆணித்தரமாக அரிய சான்றுகள் காட்டி முடிபுகட்டியுள்ளார்கள்[2].

(தொடரும்)

---

1. Brahmi has been traced back to the Phoenician type of writting represented in the inscription of Meshu King of Moap (850 B. C.) Dr. Scoff however in his remarkable commentary to the Pereplus of Erthren sea, claims a Phoenician origin for the Dravidian alphabet. (p. 229) G. Elliot Smith.

2. It is also shown that these scholars were not mistaken who commenced Brahmi with the shouth Semitic and Phoenician script-For there is much evidence to show that they were also derived from the script of Harappa and Mohenjo-Daro - R. G. Hunter.

The two Brahmi scripts one of the Northern and the other of Southern India are developments of Mohenjo-Daro script that of South India is the direct continuation and development of Mohenjo-Daro script by Dravidian people of South India. Several signs of Mohenjo-Daro script are found in the pre-historic pottery of Tinnevelly Distict in rock inscriptions of Nilgiris and tombs of Hydrabad States - Rev. Fr H. Heras. M. A. 'Light in Mohenjo-Daro.' (New Review, July 1936.)

# திங்கள்

[டாக்டர் ந. சுப்பிரமணியன் எம். ஏ., பி. எச். டி.]

## I

பற்பல நாட்டவரும் சந்திரனைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். அவை யாவும் சிறப்புடையன வாயினும், நமது நாட்டினர் கொண்டுள்ள கருத்துக்களைப் பிற நாட்டவர் தம் கொள்கைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின், பல உண்மைகள் புலனாகின்றன.

திங்களைப் பற்றி இருவகையான கோட்பாடுகளுக்கு இடமிருந்திருக்கிறது. முதற்கண் அதனை ஒரு கோள் என்கிற வானவியல் அளவிற் கருதுவது ஒன்று. அம்மரபு பற்றியும் வான சாத்திரக்கண் கொண்டும் அது புவியைச் சுற்றிவரும் ஓர் உயிரற்ற கோளம் என்று கருதுவது விஞ்ஞான முறை. மக்கள் வாழ்க்கையின் இன்பதுன்பங்களை ஆக்கும் ஆற்றல் படைத்த கோள் என மரபு வழிவந்த நம்பிக்கை காரணமாகக் கருதுவது சோதிட முறை. அடுத்த நிலையில், இவ்விரண்டோடு தொடர்பு கொண்டு, ஆதிகால சமய அடிப்படையில் தோன்றிய கட்டுக் கதைகளைப் புனைந்து பண்டுகளில் பல்வேறாக அமைந்த இலக்கியக் கருத்துக்கள் எண்ணிறந்தவை என்பது போதரும். திங்களைத் தேவனாகக் கருதுவதும் தேவியாகக் கருதுவதும், அதற்குச் சில திறன்கள் உள என்று நம்புவதும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் புனைதலும் கவிகளுக்கு ஏற்ற காப்பியச் சூழ் நிலைக்குப் பொருத்தமானவை.

சந்திரனைக் குறிக்க ஆங்கிலத்தில் வழங்கும் மூன் (Moon) என்னும் சொல் 'அளப்பவன்' என்னும் வேர்ப்பொருள் படுவதாகும்.[1] 'மானம்' என்னும் சொல்லே அளப்பவன் என்று பொருள்படும்.[2] காலத்தை அளப்பவன் என்னும் காரணக் குறியாக அப்பெயர் அமைந்தது.

விஞ்ஞான முறையில் இன்று நாம் திங்களைப்பற்றி அறிந்துள்ள அளவில் மிகச்சிறிய அளவு கூடப் பண்டைக்கால மக்கள்

---

1. பழைய ஆங்கிலம்: mona (மோனா); லத்தீன்: mensis (மென்ஸிஸ்); கிரேக்கம்: mēn (மீன்); month (மாதம்) என்னும் சொல்லும் இவ்வேரினின்றும் தோன்றியதே. தமிழில் 'திங்கள்' என்னும் சொல் சந்திரன், மாதம் என இரு பொருள் படுவதும் காண்க.

2. உ-ம்: சாந்திரமானம், சூர்யமானம், தேவமானம், உஷ்ணமானி, திரவமானி; தமிழ் நாட்டின் சில பகுதிகளில் 'மானம்' என்பது கால்படி என்னும் திரவ அளவை உணர்த்துகின்றது.

அறியவில்லை. ஆயினும் காலத்தை அளப்பதற்கு அஃது ஏற்ற தொரு கருவி என்று அவர்கள் கருதினர் என்பதில் ஐயமின்று. முழுமதி கண்ட நாள் முதல் அடுத்த முழுமதி காணும் வரை இடையிட்ட காலத்தை இரு பக்கங்களாகப் பகுப்பதும் அக்கால முழுமையும் திங்களின் பிறப்பு—மறுபிறப்புக்குட்பட்ட கால மெனக் கருதி அக்கால அளவினையே 'திங்கள்' என்று ஆகு பெயராக்கலும், மிகப் பழமையான கால அளவையாம். 'ஞாயிற்றின் செல'வையும், புவி ஞாயிற்றைச் சுற்றும் உண்மை யையும் மனிதன் அறிந்தது மிகப் பிற்காலத்தே; அதனை அடிப் படையாகக் கொண்டு ஆண்டிற்கு 365¼ நாட்கள் எனக் கணக் கிட்டது அதற்கும் பிற்பட்ட காலமாம். ஆதலால் வானவெளியில் வட்டமிடும் கோளங்களில் மனிதனால் முதன் முதல் ஆயப்பெற்றது பூமிக்கு மிக அண்மையில் திரிதரும் திங்களே என்பது தெளிவு. இற் றைக்கு அரைநூற்றாண்டுக் காலத்திற்கு முன்புவரை தமிழ்நாட் டுப் பஞ்சாங்கக் கணக்குக்களில் 'சாந்திரமான' அடிப்படையைக் கொண்ட 'வாக்கிய'மே நிலவி வந்தது; அதன் பிறகு 'ஸௌர மானம்' அல்லது 'திரிக் கணிதம்' என்னும் சோதிடக் கணக்கீடு தோன்றிற்று. விஞ்ஞான முறையில் ஸௌரமானமே முற்றிலும் தவறின்றி அமைவதாயினும் வரலாற்று வகையில் சாந்திர மானமே பழமையானது.

திங்கள் ஒன்பான் கோள்களில் ஒன்று. அவற்றில் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பன வாரத்தின் நாட்களுக்குக் கிழமை பூண்டவை. இவற்றுள் ஞாயிறு ஒரு விண்மீன் (நட்சத்திரம்: Star); செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பன கோள்கள் (Planets); திங்கள் விண்மீனு மன்று, கோளுமன்று, பூமியின் ஒரு துணைக்கோளே யாம் (Satellite); இராகு, கேது என்னும் நிழற் கோட்கள் உருவற்றவை—என்பவை யெல்லாம் சோதிடர்க்கும், இலக் கியர்க்கும் பொருளல்லபோலும்.[1] அன்றியும் இவற்றை முறைப் படுத்தினரும் ஞாயிற்றின் பரிப்பும் ஒளியும் பற்றி அதற்குத் தலைமை கூறி, அடுத்து மிக்க அண்மை பற்றித் திங்களைக் கூறி, மிகத் தொலைவிலிருக்கும் சனியை இறுதியிற் கூறி, நிழற் கோட்களுக்கு நாட்களின்றி வெறுமே விட்டார் போலும்!

திங்கள் மக்கள் கண்ணெதிரே வளர்வதும் தேய்வதுமா யிருத்தலானும், அங்ஙனம் தேய்தலும் வளர்தலும் குறித்த கால அளவில் தவறாமல் நிகழ்தலானும் இத்தகைய நிகழ்ச்சிகள் ஞாயிற்றிற்கோ பிற கோள்கட்கோ நிகழ்தல் இன்மையானும்

---

1. இதுபற்றியே சம்பந்தரும் 'ஞாயிறு, திங்கள்......பாம்பிரண்டு' என்று இவற்றை வேறுபாடறக் கூறினர்.

திங்களையே கால அளவையாகக் கொண்டனர். திங்களின் சிறப்பியல்பு அதற்கு ஓர் ஏற்றமளித்தது. அவ்வேற்றம் காரணமாகத் திங்களைப் பற்றி எண்ணிறந்த நம்பிக்கைகளும் கொள்கைகளும் பிறந்தன.

சித்திரைத் திங்களில் நிகழும் முழுமதியும், தை ஆடித் திங்கள்களில் நிகழும் இருண்மதியும், பிரதமை நாட்களெல்லாம் சிறப்பிலவாதலும், விநாயக சதுர்த்தியும், நாக பஞ்சமியும், கந்தர் சஷ்டியும், ரத சப்தமியும், கிருஷ்ணாஷ்டமியும், ராமநவமியும், வைகுண்ட ஏகாதசியும் துவாதசியும், நரகசதுர்த்தசியும் என இவையெல்லாம் ஒருவகைச் சிறப்புடையனவாதலும் யாவரும் அறிந்தவை. 'சாதுர்மாஸ்ய' விரதம் திங்களோடு தொடர்புடைத்தாதலின் சந்திரனோடும் தொடர்புடைத்து என்பது விளங்கும். நவக்கிரக ஜபம் செய்வாரும், திங்கட்கிழமை (சோமவாரம்) விரதம் கடைப் பிடிப்பாருமாகத் திங்களின் தெய்வத்தன்மையில் நம்பிக்கையுடையார் பலராவர்.

மூன்றாம் பிறை பல சமயத்தினராலும் போற்றவும் வணங்கவும் பெறுவது. ஆட்டோமான் (ஊஸ்மானிய) சுல்தான் தனது கனவிற் கிழக்கு முதல் மேற்கு வரை இரு கோடியையும் நீட்டியெழுந்த பெரிய பிறைத் திங்களைக் கண்டதால் அதனைத் தனது கொடியிலமைத்த வரலாற்றினை இஸ்லாமியர் கூறுவர்; அம்மதத்தினர் தமது மதக் கொடியில் அமைத்ததும் பிறை; கிறித்தவர்கள் யேசுவின் நற்றாயாகிய கன்னிமேரியின் காற்கீழ் வரைவதும் பிறையே; இந்து சமயத்திலோ பரமனார் திருமுடிக் கணிவதும் பிறை; பதினெண்கணனால் ஏத்தப்படுவதும் பிறையாம்.

தேய்பிறையும் இருட்பக்கமும் தீயகுறியின என்பதும், வளர்பிறையும் ஒளிப்பக்கமும் நற்குறியின என்பதும் பண்டைக் காலந்தொட்டு மக்கள் கொண்ட கொள்கைகள்; ஏனெனில், முன்னது வீழ்ச்சியையும் பின்னது எழுச்சியையும் அவர்களுக்கு நினைப்பூட்டியமையான் என்க. இருண்மதியன்று திங்களும் ஞாயிறும் ஒன்று கூடுவதாகக் கண்ட இலக்கியக் கொள்கை அவை வானில் பூமியோடு ஒன்றி நிற்கும் விண்வெளி உண்மையால் வலுப்பெற்றது. சந்திரனால் புற்பூண்டுகள் செழித்து வளரும் என்னும் நம்பிக்கை பண்டைக் காலந்தொட்டுப் பன்னாட்டு மக்களுக்கும் இருந்து வந்தது. திங்களுக்கும் வெள்ளத்திற்கும் தொடர்பு உண்டு என்பது பிறிதொரு கருத்து. இஃது 'அனார்யர்க'ளிடம் தோன்றிய கொள்கை என்று தோன்றுகிறது; ஏனெனில் ஆரியர் வேதங்களில் நீர்ப்பெருக்கிற்குக் கிழமை பூண்டவன் வருணனே யாவான்.

ஈதின்னமாகச் சந்திரனுக்குக் கோவிலமைத்து வழிபட்டு வந்த பல பண்டையோரைப் பற்றி நாமறிவோம். ஆரியர் மதத்தில் சூரியனுக்கும் வருணனுக்கும் அங்கிக்கும் இந்திரனுக்கும் இருந்த பெருமை சந்திரனுக்கு இருந்ததில்லை. அன்றியும் கோயிலமைத்து அதன்கண் உருவவழிபாடு செய்தல் என்னும் சமயமரபு பண்டைய ஆரியர் அறியாதது. ஆனால் சங்ககாலத் தமிழர் திங்களைக் கோவிலில் வைத்து வழிபட்டனர் என்பது அக்கால இலக்கியத்தால் விளங்கும். மாலதி என்பாள் தன் மாற்றாளின் இறந்த மகவை ஏந்திக்கொண்டு 'நிலாக் கோட்டம்' ஈருகப் பத்துக் கோட்டங்கள் புக்க வரலாற்றை இளங்கோவடிகள் கூறுகின்றார்.[1] அதே ஆசிரியர் "திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்" என்று மங்கல வாழ்த்துக் கூறித்[2] தமது காப்பியத்தைத் தொடங்கி, இரவியினும் நிலாச் சிறந்தது என்னும் இந்நாட்டுக் கொள்கையை அமைத்தார். ஈண்டும் பிறண்டும் திங்களைக் கலாவான் என்றும் கல்விக்கு அதிபதி என்றும் கூறு முகத்தால் அதனை ஆண்பாலாகக் கருதினர் என்பது விளங்கும். இவ்வாறே விதவேனியர், ஸ்லவானியர், பண்டைய மெக்ஸிகர்கள், அரேபியர்கள் முதலியோரும் திங்களை ஆண் பாலாகவே கருதுவர். ஸ்காண்டிநேவியர் தமது புராணமாகிய எட்டா (Edda)வில் சந்திரனை ஆண்பாலாகவும் இரவியைப் பெண்பாலாகவும கூறுகின்றனர். 'மண்டில்பாரி' (Mundil - fori) என்னும் இயக்கன் மகன் 'மானி' (Moon) என்றும், மகள் சூரியன்—ஸால்—(Sol)[3] என்றும் அவர் கூறுவர். ஆனால் எகிப்தியர், கிரேக்கர் முதலியோர் சந்திரனைப் பெண் தெய்வமாகவே கொண்டாடினர். எகிப்தியர் சந்திரனைத் தமது சிறந்த தெய்வங்களுள் ஒன்றாய உலகமாதாவாகிய 'ஐசிஸ்' (Isis) என்னுந் தெய்வமாகக் கொண்டு அழகிய கோயில்களில் அமைத்து வணங்கிவந்துள்ளார்கள். கிரேக்கர்கள் அதனை 'டயானு' (கிரேக்கம்: Diana; லத்தீன்: Selene: செலினீ) 'லிந்தியா' என்னும் பெயருள்ள தெய்வமாக வைத்து வழி பட்டுள்ளார்கள். டயானுவை வேட்டுவர் தம் கடவுளாகவும் வேட்டையாடலின் அதிதேவதையாகவும் கருதுவர். 'எபீஸஸ்'

---

1. சிலப்பதிகாரம், கனாத் திறமுரைத்த காதை: IX: 13. நிலாவுக்குக் கோயில் புதாரில் உண்மையறியாதார் இந்தியாவில் திங்களுக்குக் கோயில் இல்லை என்று கூறினர். (Encyclopaedia of Religion and Ethics Vol. II. p. 805).

2. ஷை: மங்கல வாழ்த்துப் பாடல்: 1

3. 'Solar' என்னும் ஞாயிற்றுத் தொடர்புடைய பெயரெச்சம் இச்சொல்லினின்றும் பிறந்தது.

(Ephesus) என்னும் தீவில் டயானுவிற்குக் கிரேக்கர்கள் அமைத்திருந்த அழகிய கோவிலை உலகத்தின் ஏழு அற்புதங்களுள் ஒன்ருக உலகினர் வியந்து பாராட்டுவர். மேலும் அவர்கள் அதனைச் சூரியனின் தங்கையாகிய 'பெபி' (Phoebe) என்று கொண்டாடுவார்கள். 'பெபி' 'அபொல்லோ' (Apollo) அல்லது 'பீபஸ்' (Phoebus) என்று பெயரிய கிரேக்கக் கடவுளான சூரியனின் தங்கை என்பர். இச்செலினீ என்னும் தெய்வம் மிகக் கட்டழகு வாய்ந்த 'எண்டிமியான்' (Endymion) என்னும் பெயரிய இடையர்குல இளைஞனின் பெருவனப்பில் ஈடுபட்டுப் பெருவேட்கை வயத்தளாய் அவனை யிடையீடின்றித் துய்த்தற் பொருட்டு நீண்ட துயிலிடை அமிழ்த்தியதாகக் கூறும் கிரேக்கர் தம் புராணக் கதையினையே ஜான்கீட்ஸ் (John Keats) என்னும் ஆங்கிலப் புலவர் 'எண்டிமியான்' என்னும் பெயரிய ஒரு பெருங்காப்பியமாக இயற்றியுள்ளார். ஜர்மானியர் இன்றும் சந்திரனை ஆண்பாலாகவும் சூரியனைப் பெண்பாலாகவும் கருதுகின்றனர். ஆயினும் அரேபியர்களும் இந்துக்களும் சந்திரனை ஆண்பாலாகவே தமது இலக்கியங்களில் கூறுவர்.

ஞாயிறு உருவினும் ஒளியினும் சிறந்தமையான் அதனைக் கணவனாகவும், திங்களை ஞாயிற்றின் மனையாளாகவும், காலையில் உதிக்கும் விண்மீனை அவர்களது மகவாகவும் கருதுவது மற்றுமொரு மரபு. ஸ்காண்டிநேவியர்களுடைய புராணக் கதைகளில் சூரியனை மனையாளாகவும் திங்களைக் கணவனாகவும் கருதுதல் மரபு; அங்கு உதிக்கும் ஞாயிறு புவியிடைக் கோட்டு நாடுகளில் காய்வதுபோல் காய்வதில்லை என்பது இதற்குக் காரணம் போலும். திங்களைப் பெண்பாற் கடவுளாகக் கருதுவோர் அதனை மக்கட்பேற்றினை வழங்கும் கடவுளாகக் கொண்டாடுவர். எகிப்து நாட்டுப் பெண்களும் கிரேக்க மகளிரும் மக்கட் பேற்றை விழைந்து திங்களை வழிபட்டனர். மத்திய அமெரிக்காவில் (மெக்ஸிகோவில்) வாழ்ந்த ஆஸ்டெக்குக்களும் (Astecs) இவ்வாறே திங்களை வழிபட்டனர். தமிழிலக்கியத்திலும் கன்னி மகளிர் பிறை தொழுதல் கூறப்பட்டது; தலைவனை அறிந்தபின் அவர்கள் இப்பிறை தொழுதலைக் கைவிடுதலும் இலக்கியக் கூற்றேயாம். 'தெய்வந் தொழாஅள்' என்ற விடத்து வள்ளுவரும் திங்கட் கடவுளை வழிபடுதல் நிறுத்தப்பட்டமையைக் கூறியதாகக் கோடலே சிறப்புடைத்து; ஆண்டுத்'தெய்வம்' என்றது பிற கடவுளரையன்று. அகப்பொருட்டுறையில் 'பாங்கி மதியாராய்தல்' என்புழியும், 'பாங்கிமதியுடம்படுதலி'லும் 'மதி' என்றது 'அறி'வையேயன்றித் திங்களையும் இரட்டுற மொழிதலால் குறித்ததாகக் கொள்க. சந்திரனை உட்படுத்தி,

அஃதாவது தலைவி பிறைவழிபாடு செய்கின்றனளா அல்லளா என்பதை ஆய்ந்து அறிதல் என்பதே அதன் பொருள் என்க.

சந்திர கிரகண காலங்களில், கருவுற்ற மகளிர் மறையும் சந்திரனை நோக்கலாகாது என்று நம்மவரிடையே வழங்கிவரும் மரபுபற்றிய நம்பிக்கை, சந்திரன் மறைந்தால் (அவன் நாயகனாதலின்) கருவளர்ச்சி குன்றும் என்றும் கருச்சிதைவு நேரிடும் என்றும் அஞ்சியதால் ஆதல் வேண்டும்.

இந்நாட்டிலேயன்றிப் பிற பல நாடுகளிலும் சந்திரனை ஆண்பாலாகக் கருதும் மரபு உண்டு; ஆயினும் நியூஜிலாந்து நாட்டவரான மயோரிகள் 'உலக மக்கள் யாவர்க்கும் சந்திரனே பொதுத் தந்தை' என்றும் 'உலக மகளிர் யாவர்க்கும் அவனே ஆதிக் கணவன்' என்றும் கருதுவர்.[1]

இன்னும், அரியாஸ்டோ (Ariosto) என்னும் புலவர் ஒருவர் ஆர்லாண்டோ பூரியோஸ் (Orlando Furios) என்னும் பெருங் காப்பியம் ஒன்று இயற்றியுள்ளார். அதில் கீழ்க்கண்ட வரலாறு ஒன்று கூறப்படுகின்றது: அக்காப்பியத் தலைவன் தான் கருதிய மங்கைபால் உண்டான காதல் மிகைமிக்குச் சித்தம் கலங்கிப் பலவிடங்களிலும் திரியும்பொழுது, தேவ மங்கை ஒருத்தியைக் கண்டு, அவள் தேற்றத் தேறி, அன்னாள் உதவியாற் சந்திரமண்டலம் புகுந்து ஆண்டு நோக்கினான்; அவ்வாறு நோக்குகையில், இம்மண்ணுலகத்தில் வெறுமையாய்ப் பயனின்றிக் கழிந்த காலமும், பொருளும், உறுதி தவறிய வாக்குக்களும், நிறைவேறாத வேண்டுகோளும், கொன்னே சொரிந்த கண்ணீரும், கடைபோகாத முயற்சிகளும், முற்றுப் பெறாத ஆசையும் எண்ணமும் தொழிலும், இன்னோரன்ன குறைபாடுடையன வெல்லாம் அணிஅணியாக அவற்றிற்கு உரியவர் தம் பெயருடன் அடுக்கிவைக்கப்பட்டிருந்தவற்றைக் கண்ணுற்றதாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வுலகில் வாங்கின லஞ்சப் பொருள்கள் எல்லாம் பொன்னாலும் வெள்ளியாலும் இயன்ற கொக்குவாய்களிற் கோப்புண்டு தொங்கிக் கிடந்தன. பயனின்றி வீணாய்க் கழிந்த திறமைகள் எல்லாம் பெட்டிகளிற் சேமிக்கப்பட்டிருந்தன. இப்புனைந்துரைவகையால் சந்திரனை இவ்வுலகின் உலைந்து போன கழிசரக்குக்கள் வைக்கும் அறையாகக் கவி கருதினார் என்பது போதரும்.

(தொடரும்)

---

1. Briffault: Sex in Civilization, p. 37

# உலக அமிழ்து

[திருப்பெருந்துறை, புலவர், ஆ. மணிவாசகன்]

(செல்வி, சிலம்பு-௪௧, பரல்-௩, ௧௧௨ ஆம் பக்கத்தொடர்ச்சி)

(வேறு)

20. பாவ இரவும் உறங்கியதே—வேள்விப்
பார்ப்பனர் கண்கள் உறங்கினவே
கோவல னுயிவன் ஆவினையே—கொண்டு
போயிட எண்ணியும் போயினனே!

21. காரிருள் பாதை மறைத்திடினும்—அருள்
காத்துமே ஒளிதரப் பலதூரம்
ஓரிடம் சென்றதும் தங்கியங்கே—இந்த
ஒப்பிலா ஆவினை அன்புசெய்தான்!

(சிலர் பசுவைத் தேடி வருதல்)

22. விழித்திட்ட பார்ப்பனன் ஆவினைக் காணுமல்
வெருவித் தவித்தனன் வெருகினைப்போல்
வழித்தடம் நோக்கியே அனுப்பிவிட்டான்—சில
வந்தனர் சேய்மையில் கண்டனரே.

23. கூற்றினைப் போல்சிலர் ஓடிவந்தார்—உயிர்
கொன்றிடக் கூலியும் வாங்கிடுவார்!
ஆற்றலுடை ஞான புத்திரனைக்—கண்டும்
ஆவோ டழைத்தனர் வீட்டினுக்கே.

(அறக்கைதிகளாக வருதல்)

24. திரும்பி வரும் அறக்கைதிகளைக்—கண்டே
திகைத்திடும் இருளென்னும் நங்கையவள்
திரும்பியே சென்று புலம்பிடுவாள்—வையம்
திருந்தவே வேண்டி யழுதிடுவாள்!

25. அருளையும் அறத்தையும் கட்டியொன்ருய்—வலி
ஆணவர் கையிலே பற்றிவந்தார்
தெருவிலே அந்தணர் கண்டுவிட்டார்—அந்தோ
தெய்வமும் கண்டே இரங்குதம்மா!

26. போதங் கனிந்தவன் நெஞ்சினிலே—ஒளி
போதாய் மலர்ந்தும் முகந்தனிலே
ஏத மொன்று மின்றி இறைவனையே—ஒத்தும்
எழிலுடல் காட்டியும் வந்தனனே !

(வரும் வழியில் கண்டவர் கூறுதல்)

27. கண்டனர் கண்டனர் கன்னியரும்—பிள்ளைக்
கனிகளும் முதியரும் விடலைகளும்
கொண்டனர் இன்பமும்; வேள்வியிலே—இன்று
கொடுத்திடலாம் பலி ஆவையென்றே.

28. காலையில் விற்றிடப் பால்தயிரும்—கொண்டு
கன்னியர் வந்தவர் ஆவைக்கண்டே
சாலையில் வேள்வியில் செத்திடுமோ ?—அருள்
சாகா வரந்தனைத் தந்திடுமோ ?

29. என்று மனஞ்செத்துச் சென்றனரே !—உண்மை
என்றும் உணராத எக்களித்தோர்
துன்றிய ஆவினை இந்தக்கள்வன்—தானே
தூரத்தியே சென்றவன் என்று சொன்னார்.

30. காட்டை உழுதிடக் கழனி உழுதிடக்
காதலி யோடுமே செல்பவரும்
மாட்டையும் கண்டுமனம் பதைத்து—நேரம்
மாண்டிட நின்றனர் வீதியிலே.

31. மொட்டை யடித்திடும் அம்பட்டனும்—துணி
மோதித் துவைத்திடும் வண்ணானும்
கிட்டவந்தே இந்தப் பாவத்தையும்—கண்டு
கிளறிமனம் சோர்ந்து நின்றனரே.

32. குளித்திடச் சென்றவர் இங்குவந்தார்—கோவில்
கும்பிடச் சென்றவர் இங்குவந்தார் !
உளியனும் கொத்தனும் தச்சனுமே—கடன்
ஓம்பாமல் இங்கேயே ஓடிவந்தார் !

33. பள்ளியில் ஓதிடச் சென்றவரும்—விட்டுப்
பார்த்திட இங்கேயே நாடிவந்தார் !
எள்ளி உரைகூற மாட்டாமலே—நெஞ்சம்
எதையும் மறந்துமே நின்றுவிட்டார் !

34. புத்தன் அருளினைக் கற்றவரும்—வந்து
புழுங்கியே நின்றனர்! புத்திரனும்
எத்தகை யோரை யும்கண்டுகொண்டே—வேள்வி
எரிந்திடு சாலைக்கே சென்றனனே.

## (வேள்வியோர் கண்டு அவரைக்கட்டுதல்)

35. "இன்றுசெய்யும் வேள்வி தவறிடுமோ?—எங்கள்
எண்ணமும் பாழாவே போய்விடுமோ?"
என்று மனம்நொந்த அந்தணரும்—கண்டே
ஆனந்தங் கொண்டனர் பாவஞ்செய்ய.

36. "மாட்டைப் பிடித்தவன் புத்திரனோ?—இவன்
மாண்பெல்லாம் எங்கேதான் போயதுவோ?
ஏட்டைக் கிழித்திட வேண்டுமடா—இந்த
ஏழையை ஓர் தூணில் கட்டுபோடா!"

37. என்றனன் அந்தண உவாத்தியென்போன்—ஞானம்
இரங்கி யழுதிடச் செய்துவிட்டான்!
கன்றும்படி தூணில் கட்டப்பட்டான்—ஆவும்
கட்டிட உவாத்தியும் ஏசினனே;

## (வேள்வித் தலைவன் ஏசுதலும் அடித்தலும்)

(வேறு)

38. "புலையனே! எங்களைப் புலம்பிடச் செய்தே
இரவிலே ஆவினைக் கவர்ந்ததும் ஏனடா?
கள்வனாய் நீயும் மாறினாய் கயவா!
விள்ளிட முடியா வேதமே கற்றும்
செய்தனை களவே சொல்லடா!
பொய்யனே நீயும் புகலுவாய் புகலுவாய்!"

(வேறு)

39. கேட்டவன் ஒன்றுமே சொல்லிடானே—என்று
கோலை யெடுத்தும் அடித்துவிட்டான்
மாடுமழுது மனம்சோர்ந்து—கொம்பை
மண்ணிலே குத்தியும் தீட்டியதே!

40. பசவும் புலியெனப் பாய்ந்ததுவே—குடல்
பறித்துமே மாலையாய்ப் போட்டதுவே
கொசுவுமே நீதியைக் கூறிடாதோ?—அன்பும்
கொத்தென இங்குமலர்ந் திடாதோ?

(அருளற்றவர் பசுவைப் பிடிக்கச்செல்லல்)

41. குத்திய ஆவுமே ஓடியதே—அங்கே
குண்டாந் தடியினர் ஓடினரே!
பத்தியாய் நின்றஆ புத்திரனும்—அவர்
பார்த்துச் சகியாமல் விம்மிவிட்டான்!

(ஆபுத்திரன் அருள்மாரி பொழிதல்)

42. கற்றவுணர்வுகள் பொங்கினவே—அருட்
காத லுணர்வுகள் பொங்கினவே!
நற்றவ நெஞ்சினன் சீற்றங்கொண்டே—இந்த
நானிலம் அஞ்சிடக் கூறலுற்றான்;

(வேறு)

43. ஆவினைப் போலொரு ஆருயிர் இம்மண்ணில்
அறிந்தது முண்டோ? சொல்—அதன்
ஆவியைப் போக்கியே வேள்வியில் ஊனினை
அவிசென மாய்ப்பீரோ?

44. ஆருயிர் யாவையும் அன்பினால் போற்றுதல்
ஆண்டவன் போற்றுதலாம்!—இதைப்
பாருயர் நூலெல்லாம் பறையெனச் சாற்றுதல்
பார்த்து மறியீரோ?

45. பேசிட மாட்டாத பேரிறை போலிவை
பெருமை யுடையனவே—அருள்
ஏசிட இவ்வினை வேதியர் செய்திடின்
அறமும் அழியாதோ?

46. பாழும் இடங்களில் யாருமே செய்யாத
பச்சைகூர் புல்லினையே—தின்று
வாழும் உயிரினை வாழும் மனிதர்கள்
வதைப்பதும் முறையாமோ?

47. பிள்ளையைப் பெற்றவள் செத்துவிடின் பாலும்
பிள்ளைக்கே தந்துவிடும் !—தன்
பிள்ளையாம் கன்றினைக் கட்டிக் கறப்பவர்
பேதையர் ஆவாரே !

48. தயிரென மோரென நெய்யெனத் தின்றிடத்
தவிராத மானிடங்கள்—தம்
உயிரெனப் போற்றிட வேண்டிய ஆவினை
உலையிலே இட்டிடுமோ ?

49. பிறந்திடும் நாள்முதல் இறந்திடும் நாள்வரை
பேணிடும் மானிடரை !—இதைச்
சிறந்த முறையினிற் சிங்காதன மேற்றும்
சிறந்திடும் மானிடமே !

50. கொன்றே இவ்வூனினைத் தின்றே சுவைப்பவர்
கூரிய மானிடரோ—இதை
நன்றே எனக்கொள்ளும் நன்றியில் லாமக்கள்
நாயகன் வேண்டுவனோ ?

51. மனிதனைத் தின்றிடா மாப்பசு ஊனினை
மனிதனும் தின்பானேல்—இனி
மனிதனை மனிதனே தின்றிடுங் காலமும்
மண்ணிலே வாராதோ ?

52. பயிரை யறுத்துமே பயிருக் குரமிடல்
பார்த்ததும் உண்டோ ? சொல்'—இதன்
உயிரை யறுத்துமே உயிருக் குணவிடில்
இறைவனும் வேண்டுவனோ ?

53. நெஞ்சிலே வஞ்சங்கள் நிறைந்தவர் பூசையைக்
கண்டுமே நாணுவனே !—இறை
செந்தழல் வந்துமே தின்றுவிடும் என்னல்
செத்தவர் கொள்கையன்றோ?

54. பாவம் பலசெய்து வேள்வியைச் செய்திடின்
பரியுமோ பாவங்களும் ?—உயிர்
சாவ வினைசெயின் அவ்வினை தன்னையே
சாருமே கேட்டீரோ ?

(தொடரும்)

# வாழ்வும் வளனும்

[வித்துவான் க. சுப்பிரமணியம், பி. ஏ.]

வாழ்வாங்கு வாழ்வாரையே வள்ளுவப்பெரியார் உலகத்துள் உயர்த்திக் கூறிப் போனார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனே வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பெறுவான். வையத் தொடர்பும் இல்வாழ்வானுக் கன்றி மற்றையார்க்கின்றாதலின் இல்வாழ்க்கை என்ற அதிகாரத்துள் வாழ்வாங்கு வாழ்தலை வலியுறுத்திய வள்ளுவர்—வாழ்வாங்கு வாழும் வகையை அடுத்தடுத்த அதிகாரங்களிற் கூறியுள்ளமையான் அறியப்பெறும். அறமிருவகையானும் பெறுதற் கூடுமெனினும் அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்று சிறப்பித்தமையானும் துறவறத்தார்க்குப் பசிமாற்றும் பண்பின்மையானும் பிறர் பழிப்பு நேராவண்ணம் இல்வாழ்வு வாழப் பெறின் நல்லதென்றார்.

இல்வாழ்வுதான் இருவர் துணையின் நடைபெறுமொன்றாதலின் தனிச் சிறப்புடையது. என்னெனின் ஒருவர் குறை மற்றவர் திருத்த—ஒருவர் பொறை இருவர் நட்பு பெருகுமாதலின் வழியின்பம் பெருகி இன்பமும் பயனும் உண்டாகுமென்க. துறவற வாழ்வில் தனிநிலை பெருகித் தாம் தாம் சென்றதே சிறப்பெனக்கொண்டு செல்லவும் பிழை பல மலியவும் ஏதுவாகுமெனவே அது வேண்டா வாழ்வென விடுத்திடுக. வாழ்க்கைத் துணை நலம் நன்கு அமையப்பெற்று இல்லற வேள்வியை இனிது நடத்தி அறிவறிந்த மக்கட்பேறு பெற்று வாழ்தலே மிக்க பயனுடைய வாழ்வெனச் சுருக்கமாய்க் கூறலாம். வாழ்வின் பயன் பொருள் நோக்கி நிற்றலின் வளம்மிக வேண்டற்பாலதாகும்.

நடுவணது எய்த இருதலையும் எய்து மென்றாராகலின் சிங்க நோக்காய், உறுதிப் பொருள் மூன்றனுள் நடுவாக நின்ற பொருளின்றேல் அறம் செய்தலும் இன்பம் நுகர்தலும் கூடாமையின்—பொருள் சேர்த்தல் வேண்டும். அருளுக்கு மாதியாய் நின்ற பொருளின்றேல் இவ்வுலக வாழ்வில்லையென்று விளக்கினார், உவமை முகத்தான்.

> "அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள் உ௪௭)

என்றார் வள்ளுவப் பெருந்தகை. அறியாப் பொருளை விளக்க யாவரும் அறிந்த ஒன்றையே உவமையிடுவது மரபாதலின், பொருளில்லார்க்கு இவ்வுலக வாழ்வில்லை யென்பது யாவருமறிந்த தொன்னெறியாகும். பொருள் போல் போற்றத்தக்கார்க்

கல்லாதவரையும் ஒரு பொருட்டாக எண்ணச் செய்யும் பெருமை பொருளுக்கன்றி வேறெப்பொருளுக்கும் இடையா தெனின் பொருளின் பெருமைக்குச் சான்று வேறு தேவை யின்று. எனவே பொருள் இவ்வுலக வாழ்வின் தேவைக்கு மிக இன்றியமையாதது என்பது பெறக்கூடும். அவ்வுலக வாழ்விற்குத் தேவையான அருளைக்கூடப் பொருளாற் பெறுதற் கூடும். பொருளின்மேல் அருளைப் பேணல் சாலாது. அன்பாய் பெறப்பட்ட அருள் என்ற குழவியைப்பொருள் என்ற செவிலித் தாய் வளர்க்கிறாள். அருளுக்கு நற்றாய் அன்பாயிருந்த போதிலும் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பவள் செவிலித்தாயான செல்வச் சீமாட்டி இதனை:

"அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு" (குறள் ௭௫௭)

என்றுரைத்தார். எனவே பொருளுடையாரே அருள்பெற முடியு மென்பதும் அவ்வுலக வாழ்வு பெறுதற் கூடுமென்பதும் அறிகின் றோம். இருபெரும் உலக வாழ்வின் நெறிக்குப் பொருள் தேவை என்பதும் பெறப்படுகின்றது. "பொருளல் லவரைப் பொரு ளாகச் செய்யும்—பொருளல்ல தில்லை பொருள்," என்று வள்ளுவர் கூறியதைவிட மிகுதியாய் யாரும் கூறிவிட முடியாது. இப் பொருள் வழிதவறிப் போய்ப் புல்லறிவாளரிடத்தும் புகுந்து, அவர்களை உயர்த்தி விடுகின்றது.

"இல்லாதவனே பொல்லாதவனே." "இல்லானை எல்லாரும் எள்ளுவர்," "இல்லானை இல்லாளும் வேண்டாள்," "ஈன் றெடுத்த தாயும் வேண்டாள்," "ஏழை சொல் அம்பலம் ஏறாது"—என்பன போன்ற பழமொழிகளின் பொருள் கருதிப் பார்ப்பாருக்கு இவ்வுலக வாழ்விற்குத் தேவை பொருள் என்பது பெறப்படும். பொருளற்ற மனித வாழ்வு முழுமை பெறுதல் இல்லை. சங்கச் செய்யுள் யாத்த முன்னோர் அகத் துறை பற்றியே எழுதுங்கால் அகத்துறையுள் ஏற்படும் பிரிவு களில், "பொருள் வயிற் பிரிவு" என்ப தொன்றுங் காட்டி அதன்வழிப் பல பாடல்கள் எழுதியுள்ளனர். அதன் முறை காணுமிடத்துப் பொருள் காரணமாக ஒரு தலைவன் தலை மகளை விட்டுப் பிரிந்து ஒரு மூன்று திங்களோ ஆறு திங்களோ வெளியூர் செல்லுதல் மரபு—அதுவும் வணிக முயற்சியான் பொருள்திரட்டி வந்துள்ளனர். "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு", என்ற பழமொழியும் வணிகத் தொழிலில் கடல் கடந்து சென்று வந்த செய்தியைக் கூறவெழுந்த பழமொழி யாகும். இம்முறையான் 'பாவ' நெறி உள்புகவில்லை—புகவும் வழியில்லை. ஒரு பொருள் இல்லா நாட்டிற்கு அப்பொருள்

கொண்டு போய்க் கொடுத்து அதற்கீடாக அங்கு மலிந்த பண்டங்களைப் பெற்றுவரும் பண்டமாற்று முறையில் ஒருவரை ஒருவர் ஏமாற்றும், இக்காலத்திய வஞ்சக வணிகம் தலைக் காட்ட, வழியின்றிப் பொருள் திரட்டும் துறை நன்முறையில் நடைபெற்று வந்தது.

மாபெரும் வீரக்கூட்டத்தை வைத்துக்கொண்டு போர்க் காலத்துத் துணைப்படையாக நின்று வெற்றிவாங்கித் தந்து அதற் கீடாகப் பேரரசர் தரும் காணிக்கைப் பொருளைக் கொண்டு வாழ்க்கைமுறை வகுத்துக் கொண்ட சிற்றரசர்களும் வாழ்ந்தனர் பண்டு. இவர்கள் வீரவாணிபம் செய்து பொருளீட்டினர். இதன் வழிப் பெருகியோர் தாம் சிலம்பில் காணப்பெறும் மாறுதலைக் கொள்ளும் ஆறலைக் கள்வர் முதலாயினோர்.

பொருள் சேர்க்கும் நெறி முறையானதாயிருக்கவேண்டும். ஆறலைச் செல்வம் வலியோர் தம்மால் எளியோரிடமிருந்து வன்முறையால் பெறும் மறச்செயலுடையது. எனவே அது பொருந்தாது. பழைய பண்டமாற்றில் வஞ்சமில்லை. வீரர் பெற்ற காணிக்கையிலும் கையூட்டில்லை. கால மாறுதலில் காசு பணத்திற்கு வியாபாரமும் சம்பளத்திற்குப் பதவியும் பெருகிப் பொருள் திரட்டும் வாயில்கள் விரியலாயின. 'அரைக் காசு' பதவியாயினும் அரண்மனை வேலை மேலானது,'' ''உத்தியோகம் புருட லட்சணம்''—என்பன போன்ற பழமொழிகள் பொருள் வளர்க்கும் பழமொழிகள் அல்ல, தனிப் பட்டோருக்குள்ள பெருமைக்கு வளர்ந்த பழமொழிகள். எனவே எவ்வகையாயினும் நேர்மையான வழியில் வரும் செல்வத் தால் வாழ்க்கை விளக்கமுறும்: அப்பொருள் தானும் நேர்மை யான வழியில் செலவிடப் பெறுவதுடன் அதற்குண்டாம் இன்பமும் தனித்தன்மை வாய்ந்ததே ஒருவன் தன் சொந்த நிலத்தில் பயிரிட்டு விளைந்த காய்கறிக்குச் சுவை மிகவே காண்பான். அதே காய்கறியைக் காசு கொடுத்து வாங்கும் பொழுது காணமாட்டான். இஃது உழவனின் உள்ளம். வாளா வந்த காய்கறியை விடத் தன் சொந்த வருமானத்தி லிருந்து காசு கொடுத்து வாங்கி வந்த காய்கறியைப் பதவியி லிருப்பவன் சுவைப்பான். இது பதவியாளன் உள்ளம். இப்படியே காணுமிடத்துத் தன்னுழைப்பின் பயனாய்த் தோன்றும் எதனையும் சுவைக்கும் உள்ளம் மனிதனுக்குண்டு. அங்குத்தான் உண்மையான இன்பம் தழைக்கின்றது.

எனவே பொருள் திரட்டும் செயலிலும் தன்னுழைப்பால் உழைப்பிற்கேற்ற அளவு பொருள் கிடைத்து அதனை முறைப்படி அவன் செலவிடும் பொழுது அறத்தாறு மாறாமல் அமைவ

துடன் அதன் முழுத்தன்மையை அவன் நுகர்வதால் இன்பமும் அடைகின்றான். ஒருவன் தன் உழைப்பிற்கும் மிகுதியான பொருளைப் பெற்றுவிட்டான் என்றால் அவனைத் தீய நெறிகள்பற்றிக் கொள்கின்றன. அவனிடத்தில் இதுபோழ்து எங்கே அறநெறி? எங்கே இன்பம்? எல்லாம் மாற்றம்தான் ஆகவே முறைப்படி வரும் பொருளே கணக்கிற் சேரும்; கையூட்டு வாங்கினோர் அதற்குமா வருமானவரி கட்டுகின்றார்கள்? கள்ள வணிகத்தில் கொள்ளை லாபம் பெறுவோர் அதற்குமா விற்பனை வரி கட்டுகின்றார்கள்? இந்த இரண்டும் செய்து விட்டால்தான் பாவ மன்னிப்புத் தரும் அரசினர் இன்னும் பல திட்டங்களை முட்டின்றி முடித்து விடுவார்களே! இவ்விரு செயலர்க்கும் அறமுமில்லை; வாழ்வில் இன்பமுமில்லை. எங்கே அரசினர் அறிவரோ என்ற அச்சமும் அதை மறைக்கப் பல முலாம் பூசிய அறச் செயல்களும் செய்த பின்னரும் கூட வாழ்வில் அமைதியிராது. பொருள் வேண்டியதுதான். இவ்வுலகிற்கும் அவ்வுலகிற்கும். அப்பொருளும் தானே வந்தடையாது சேர்க்கத்தான் வேண்டும். அப்பொருளைத் திரட்டும் நன்னெறியை வள்ளுவரே வகுத்தளித்துள்ளார்.

"அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"　　　　(குறள். எ௫௪.)

என்று பொருள் செயல் வகையையும் நன்கு விளக்கியுள்ளார்.

வளமுள்ள வாழ்விலேதான் அரிய கலைகள் தோன்றும். வயிற்றுப் பாட்டுக்கு வளரும் கலைகள் உண்மையான உயர்வுக் கலைகளாகா. அக்கலைகள் பிழைசேர் பெரும் பயன் சேர்ந்து இடர் விளைக்கும். வளமான நிலத்தில் வளமான விளைவு உண்டாதல் போல நிறைந்த படிப்புடையார் நெறியான அடக்கம் பெறுதல் போல நிறைந்த கல்வியும் அனுபவமுமுடையார் தெளிந்த ஞானம் பெறுதல்போல வளமான வாழ்வுடையாரே நெறியான கடமைகளைச் செய்யுந் தகுதியுடையவராவர். வளமான பரம்பரைக் குடும்பத்தில் தோன்றியவன் சிறுமை புரிதல் பெரும்பாலும் இல்லை. சுற்றுப்புறச் சூழ்நிலை ஏதுவாக ஒருவன் தீமை புரியினும் அது களைதல் எளிதாகும் என்பது பற்றியே பழங் காலத்து வினைக்குரியாரைத் தேர்ந்தெடுக்க,

"குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு"　　　　(குறள். ௫0௨.)

என்று குடிப்பிறப்பையும் ஒன்றாக்கினார். நம் நாட்டில் ஒரு தொழில் செய்வானின் மகனும் அதே தொழில் செய்யும் மரபு வந்ததற்கும் இதுவே காரணமாகும். ஆசிரியர் மகன்

ஆசிரியர் தொழிலிற் பயிற்சி பெற்றுவிடுகின்றான். ஆனால் இதில் குறைபாடுகள் பல நிகழ இடமுண்டு. அப்பன் தொழிலில் உள்ள நல்லன தீயனவகளைக் கூர்ந்து நோக்கி—தீய வழிகளை எதிர்க்கும் சக்தியுடைய மகனாயின் அந்தத் தொழிலில் சிறப்படைகின்றான். அந்தத் தொழிலுக்கும் அவனால் ஏற்றந் தான். ஆனால் அதற்கு மாறாக அப்பனைவிட அதிகம் பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணங் கொண்டு சட்டங்களை ஏமாற்றும் வழிகளைக் கற்றுக்கொள்ளும் மகனால் அத்தொழில் சிறப்படைவதில்லை. அதற்கு மாறாகத் 'தில்லு முல்லுகள்' தலை சிறந்து நிற்பதால் அத்தொழில்புரியும் மற்றவர்க்கு ஊறு விளைக்கும் வகையின் நேர்வதுண்டு—இந்தக் குறுக்கு வழிதான் இன்று பல தொழில்களில் விளைந்துவரும் குற்றப்பாடாகும். இவற்றைப் போக்க என்னதான் அரசினர் கடும்நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் அறக்களைதல் இயலாது.

ஒரு பெண் தன் கற்பைத்தானே உணர்ந்துகாத்தலே சரியான கற்பாகும். பிறருடைய பாதுகாவலாய் ஒரு பெண்ணின் கற்பைக் காக்கலாமென்றெண்ணுவதைவிடத் தவறுடைய செயல் வேறில்லை. மாறாகத் தவறுநேர்வது நேர்ந்துகொண்டேதானிருக்கும். அதுபோலத்தான் தொழில்புரிவார் தம் தீமையைத் தாமேயுணர்ந்து திருத்திக்கொண்டாலன்றிக் களைதல் முடியாது. எனவே கையூட்டுப் பெறுவோர் கள்ள வணிகம் செய்வோர் தாமே யுணர்ந்து தம் தீமை களைதல் நன்றென அறிக.

'வளைந்தும் வழியோடுபோ' என்ற பழமொழியும் இதனையே வலியுறுத்துகின்றது. வளைந்து நீண்ட தூரம் நடந்து ஒரு குறிப்பிட்ட இடத்தை யடைய அஞ்சக்கூடாது—அதற்குக் குறுக்கு வழி ஒன்று மதிலேறிக் குதித்தாற் கிடைக்குமெனின் அதையேற்கக் கூடாது. எவ்வளவு அரும்பொருள் பொதிந்த பழமொழி! இதன் நுண்மை உணர்வார் எவரும் அலுத்தும் பிறன்மனை வழிநடக்கும் பேதைமை கொள்வாரோ? வஞ்சம் புரிந்து நஞ்சனைய செல்வம் வாரிக்குவிப்பாரோ? வினைமுடை காட்டி விளைதீமை மறந்து கையூட்டும் பெறுவாரோ? பொல்லது காட்டி நல்லதென நம்பவைத்து இரட்டிப்பு ஆக்கம் பெற எண்ணுவாரோ? ஒரு போதும் அவ்வாறு நடவார். தீய நெறியில் வரும் ஆக்கம் தீமை விளைவிக்குமாதலால் அது தீயைவிடக் கொடிதெனத் தள்ளுதலே அறிவுடையார் செய்யத் தக்க செயலாகும். எனவே பொருள்தனைப் போற்றி வாழ்—அப்பொருளும் அருள்பெறும் வாயிலுக்கு ஆக்கமாக அமையட்டும். நன்னெறியில் ஈட்டும் செல்வமே அறனும் இன்பமும் வாழ்வும் வளமும் தரும்.

# வாய்ச் செய்கை யொலிச்சொற்கள்

[பண்டித ஞா. தேவநேயன்]

மாந்தன் இயற்கையாகவும் செயற்கையாகவும் தன் வாயினாற் செய்யும் சில செய்கைகளும் சைகைகளும், ஒவ்வோர் ஒலியைப் பிறப்பித்தற் கேற்ற வாய்வடிவை யமைத்து, அவ் வொலிகளின் வாயிலாய் அச் செயல்களைக் குறிக்கும் சொற்களைப் பிறப்பித்திருக்கின்றன. அச் சொற்கட்கு மூலமான அவ்வொலிகள் வாய்ச் செய்கை யொலிகளாம். அவற்றுள் ஒன்று இங்கு விளக்கப்பெறும்.

அவ்(வு)

ஒன்றைக் கவ்வுதலை யொத்த வாய்ச்சைகைநிலை. அவ் என்னும் ஒலியைத் தோற்றுவித்தற் கேற்றதாதல் காண்க. மேல்வாய்ப்பல் கீழுதட்டொடு பொருந்துவதே கவ்வும் நிலையாம் இந்நிலை வகர மெய் யொலிபிறக்கை ஏற்கும்.

"பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்" (தொல். 98).
"மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே." (நன். 85).

அவ்—கவ்—வவ்,
அவ்—அவ்வு—கவ்வு—வவ்வு.

முதற்காலத்தில், அவ் என்னும் வடிவே, வாயினாலும் கையினாலும் மனத்தாலும் பற்றும் மூவகைப் பற்றையும் குறித்தது. பிற்காலத்தில் அவ்வுதல் என்னும் சொல் மனத்தினாற் பற்றுதலுக்கும், கவ்வுதல் என்னுஞ்சொல் வாயினாற் பற்றுதலுக்கும், வவ்வுதல் என்னும் சொல் கையினாற் பற்றுதலுக்கும், வரையறுக்கப் பெற்றன. ஆயினும், இன்றும், அவ்வுதல் என்பது உலக வழக்கில் வாயினாற் பற்றுதலை உணர்த்தும்.

எ-டு. கன்று புல்லை அவ்வித் தின்கிறது.
அவ்—ஔ, கவ்—கௌ, வவ்—வௌ.
அவ்வு—ஔவு, கவ்வு—கௌவு, வவ்வு—வௌவு.

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்."

என்பதற் கொத்து. (தொல். 56).

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்றொரு நூற்பாவும் இருந்திருத்தல் வேண்டும்.

கன்று புல்லை ஔவித் தின்கிறது.

"கூர்த்துநாய் கௌவிக் கொளக் கண்டும்"
(நாலடி. 70). தெ. கவியு.

"வௌவிய வஞ்சி வலம் புனைய." (பு. வெ. 3 : 2).

வாய் ஒன்றைக் கௌவும்போது மேல்வாயும் கீழ்வாயும் குறட்டின் ஈரலகுபோற் பற்றுவதால், கவ்வுதல் (அல்லது கௌவுதல்) என்னும் சொற்குக் குறடுபோற் கவைத்திருத்தல் என்னும் கருத்துத் தோன்றிற்று. வாயின் கவைத் தன்மையை, மாந்தன் வாயினும் விலங்கு மூஞ்சியும், விலங்கு மூஞ்சியினும் பறவை மூக்கும், தெளிவாய்க் காட்டும்.

அவ் என்னும் சொல்லினின்று, வாயினாற் பற்றுதலையும் மனத்தினாற் பற்றுதலையுங் குறிக்கும் சில சொற்கள தோன்றி யுள்ளன.

அவக்கு என்பது விரைந்து கௌவுதலையும், அவக்காசி என்பது விரைந்து கௌவும் ஆசையையும் உணர்த்தும்.

அவ்—அவா—அவவு.

அவா = ஆசை. அவவு = அவா.

"அவவுக்கை விடுதலு முண்டு." (கலித். 14).

அவவு—அவாவு. அவாவுதல் = விரும்புதல்.

அவாய்நிலை = ஒருசொல் தன்னொடு பொருந்திப் பொருள் முடிதற்குரிய இன்னொரு சொல்லை அவாவி (வேண்டி) நிற்றல்.

அவாவு—ஆவு. ஆவுதல் = விரும்புதல்.

"செந்நெலங் கழனிச்செய் வேட் டாவிய மறையோன்"
(உபதேசகா. சிவத்துரோ. 120).

ஆவிச்சேர்ந்து கட்டினன் என்பது உலக வழக்கு.

ஆவு—ஆவல். ம. ஆவல்.

கவ்வு என்னும் சொல்லினின்று, கௌவுதற் கருத்தை அடிப்படையாகக் கொண்ட சில சொற்களும், கவைத்தற் கருத்தை அடிப்படையாகக் கொண்ட பல சொற்களும், கையினாற் பற்றுதலைக் குறிக்கும் சில சொற்களும், மனத்தால் அல்லது மனத்தைப் பற்றும் சில சொற்களும் தோன்றியுள்ளன.

கௌவுதல் :

"கவ்வித்தோல் தின்னுங் குணுங்கர்நாய்" (நாலடி. 322).

கவுள் = கன்னம்.

"கண்ணீர் கவுளலைப்ப" (சீவக. 2050).

கவளம் = கௌவும் அல்லது வாய்கொள்ளும் அளவான உணவுருண்டை.

கவளம்—கவழம்.

"கவழமறியான் கைபுனை வேழம்" (கலித். 80).

கவ்வு—கப்பு.

கப்புதல் = கொள்ளுமளவு வாயிலிட்டு மொக்குதல் அல்லது விழுங்குதல்.

"அவல்பொரி கப்பிய கரிமுகன்" (திருப்பு. விநாயகர். 1.)

கவியம் = கடிவாளம் (பிங்.)

கவியம்—Pkt. kaviya.

கவிகம் = கடிவாள இரும்பு. கவிகம்—Skt. kavika.

கவைத்தல் :

கவ்—கவல்—கவர். கவ்வு = கவட்டை.

கவர்தல் = பலகாலாகப் பிரிதல்.

"காவிரி வந்து கவர்பூட்ட" (புறம். 35 : 8.)

கவர்த்தல் = 1. வழிகள் பிரிதல்,

"அறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்" (சிலப் : 11, 73). ம., தெ. கவ, க. கவலு.

2. கவடுபடுதல்.

கவர் = 1. நீர்க்காற் கிளை.

"தெற்குநோக்கி நீர்பாய்கிற கவருக்கு" (S. I. I. iii, 45).

2. பல்பிரிவு.

"மகளிர் நெஞ்சம்போற் பலகவர்களும் பட்டது" (சீவக. 1212).

3. மரக்கிளை.

4. சூலக்கிளையலகு.

ம., தெ., து. கவ, க. கவல்.

கவர்க்கால் (கவராயுள்ள முட்டுக்கட்டை, கவையுள்ள மரம், கிளைவாய்க்கால்), கவர்க் குளம்பு, கவர்ச்சுத்தியல், கவர்த்தடி, கவர்நெறி, கவராசம் (Divider) முதலிய சொற்களை நோக்குக.

கவர்படு பொருண்மொழி = பல்வேறு பொருள்தரும் சொல் அல்லது சொற்றொடர்.

கவர்கோடல் = பலவாறாகக் கருதி ஐயுறல்.

“ கவர்கோடல் தோன்றுது.” (மணி. 27 : 22).

கவடு=1. மரக்கிளை, கவருள்ள மரக்கிளை.

“ சாதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட்டு” (சீவக. 1389).

2. தொடைச்சந்து.

கவடு நுழைந்த பயல் என்பது உலக வழக்கு.

கவட்டி = ஓர் எட்டு.

3. பகுப்பு.

“ கவடுபடக் கவைஇய..........உந்தி”

(மலைபடு. 34). தெ. கவட்ட.

கவட்டடி = மரக்கிளைக்கவர், கவை.

ம. கவ, க. கவத்த.

கவட்டை = கவை, கவண்.

கவண் = கவைபோல் இருபுறமும் கயிறு அல்லது வாருள்ள கல்லெறிகருவி. ம. கவண. க. து, கவணெ.

“ கடுவிசைக்கவணி னெறிந்த சிறுகல்” (அகம். 292).

கவண்—கவணை.

“ கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும்” (கலித். 23).

கவண்—கவண்டு—கவண்டி.

கவணம் = சீலைத்துணியை இரண்டாகக் கவர்படக் கிழித்துக் கட்டும் காயகட்டு.

கவணி = கவணத்திற் குதவும் மெல்லிய சீலை. ம. கவணி.

கவணை = கவைபோல் அமைக்கும் மாட்டுத் தொட்டி.

கவைபணை — கவணை. தெ. கவணமு.

கவடு—கவடி = பிளவுபட்ட பலகறை.

ம, க. கவடி, தெ. கவ்வ (gavva).

கவடி—காடி = மாட்டுத் தொட்டி.

கவளி = 1. கவண்போல் அமைத்துத் தூக்கும் பொத்தகக் கட்டு.

“புத்தகக் கவளியேந்தி” (பெரியபு. மெய்ப். 7).

2. புத்தகக் கட்டுப்போன்ற வெற்றிலைக் கட்டு.

கவளி—கவளிகை = சிறு கவளி.

“புத்தகங் கட்டியார்த்த கவளிகையே கொலோ”

(சேதுபு. இராமதீர். 49).

கவளிகை—Skt. kavalika. (கவலிக்கா).

கவான் = 1. கவைபோன்ற தொடைச்சந்து, தொடை.

"கழுமிய வுவகையிற் கவாற்கொண் டிருந்து"
(மணி. பதி 27).

2. தொடைச்சந்து போன்ற மலைப்பக்கம்.

"மால்வரைக் கவான்" (பட்டினப். 138).

கவை = பிளவு, பிரிவு, கவர், கிளை, கவட்டை.

கவைக்கால், கவைக் குளம்பு, கவைக்கொம்பு, கவைக்கோல், கவைத்தாம்பு, கவைத்தாளலவன் (பெரும்பாண். 208), கவைநா, கவை முட் கருவி, கவையடி முதலிய தொடர்ச்சொற்களை நோக்குக. ம. கவ.

கவ்வு—கப்பு = கவர் கொம்பு, கிளை, பிளவு.

கப்புங்கவரும் என்பது உலக வழக்கு.

கப்பு — கப்பி. கப்பித்தல் = கவர்படுதல்.

"கப்பித்த காலையுடைய ஞெண்டினது"
(பெரும்பாண். 208, உரை)

கப்பு—கப்பை. கப்பைக்கால் = கவட்டுக்கால்.

கவிவு—காவு. காவுதல் = 1. தண்டின் இருபுறமும் கலை போற் கலத்தை அல்லது பொருளைத் தொங்கவிட்டுத் தோளிற் சுமத்தல்.

"காவினெங் கலனே" (புறம். 206).

2. தோளிற் சுமத்தல், சுமத்தல்.

"ஊனைக் காவி யுழிதர்வர்" (தேவா. 338, 1).

காவு + அடி = காவடி = 1. காவுதடி.
2. முருகன் காவடி.
3. சோற்றுக் காவடி.
4. தண்ணீர்க் காவடி.

காவடி—காவட்டு = கள்ளுக்காவடி.

காவு—கா = 1. காவடித் தண்டு.

"காமமு நாணு முயிர்க்காவாத் தூங்கும்" (குறள், 1163).
2. காவடி போன்ற துலாக்கோல்.
3. துலாம் போன்ற ஒரு நிறை.

"காவென் நிறையும்" (தொல். எழுத். 169).

கப்பு = காவுந்தோள். "கப்பா லாயர்கள் காவிற் கொணர்ந்த"
(திவ். பெரியாழ். 3, 1, 5).

கவல்—கவலை = 1. மரக்கிளை (பிங்).
2. கவர்த்த வழி, பலதெருக்கள் கூடுமிடம்.

"மன்றமுங் கவலையும்.......திரிந்து" (சிலப். 14 : 24).
"கவலை முற்றம்" (முல்லைப். 30).
3. மனக்கவற்சி, மனவருத்தம் (கவர்த்த எண்ணம்). ம. கவல.
4. அச்சத்தோடு கூடிய அக்கறை.
கவலுதல் = பலவாறாகக் கருதி வருந்துதல். க. கவலு.
கவல்—கவலம், கவலை. கவல்—கவலி. கவலித்தல் = கவலுதல்.

கவை = கரிசனை, அக்கறை.
கவ்வை = கவலை.
"கவ்வையாற் கலங்குமனம்" (திருக்காளத். பு. 18 : 27).

**கைப்பற்று:**

கவ—கவவு = 1. கையால் தழுவுதல்.
"கண்ணு நுதலுங் கவுளுங் கவவியார்க்கு" (கலித். 83 : 17).
2. முயங்குதல்.
"கவவிநாம் விடுத்தக்கால்" (கலித். 35).
"கவவொடு மயங்கிய காலை யான" (தொல். பொ. 173).
இருகையாலும் தழுவுதல் ஈரலகாற் கவ்வுதல் போலிருத்தல் காண்க.
3. அகத்திடுதல்.
"கவவகத் திடுதல்" (தொல். சொல். 357).
"செவ்வாய் கவவின வாணகை" (திருக்கோவை, 108).
.. உள்ளீடு.
"கவவொடு பிடித்த வகையமை மோதகம்" (மதுரைக்.626).
கவவுக்கை = அணைத்த கை. "திங்கண் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்" (சிலப். 7 : 52).
கவர்தல் = 1. முயங்குதல்.
"கவர்கணைச் சாமனார் தம்முன்" (கலித். 94 : 33).
2. அகப்படுத்துதல், பற்றுதல்.
"மூங்கிற் கவர்கிளை போல" (பதிற்றுப். 84 : 12).
3. பறித்தல், பறித் துண்ணுதல்.
"கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" (குறள். 100).
4. கொள்ளையடித்தல்.
"விடறக் கவர்ந்த வினைமொழிந்தன்று"
(பு. வெ. 3 : 15, கொளு

5. பெறுதல்.

"வறியோர் கவர......எறிந்து" (தஞ்சைவா. 20).

கவர்ந்தூண் = அடித்துண்ணும் உணவு, "பசியெருவை கவர்ந்தூ ணோதையும்" (மணி. 6 : 117).

கவைத்தல் = 1. அணைத்தல்.

"ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ" (குறிஞ்சிப். 185).

2. அகத்திடுதல்.

"ஆரங் கவைஇய மார்பே" (புறம். 19 : 18).

கவறு = 1. பிறர் பொருளைக் கவரும் சூதாட்டம்.

"கள்ளுங் கவறுந் திருநீக்கப்பட்டார் தொடர்பு" (குறள். 920).

2. சூதாடு கருவி.

"அரும்பொற் கவறங்குருள" (சீவக. 927).

மனப்பற்று :

கவர்தல் = விரும்புதல்.

"கவர்வு விருப்பாகும்" (தொல். சொல். 362).

கவவுதல் = விரும்புதல்.

"கலிங்கம்......கவவிக் கிடந்த குறங்கினுள்" (சீவக. 1058).

கவற்சி = விருப்பம். கவர்ச்சி = மனத்தை இழுக்கை.

கப்பு = கவர்ச்சி. "கப்பின்று மீசன் கழல்" (சிவ. போ. 11, 5, வெண்).

கவ—கா. காதல் = விரும்புதல், பேரன்பு கொள்ளுதல். கா—காவு. காவுதல் = நச்சுதல்.

"தேனைக் காவியுண்ணார் சில தெண்ணர்கள்" (தேவா. 338 : 1).

கா + அம் = காம் = விருப்பம், காதல். ஒ. நோ: ஏ + உம் = ஏம்—யாம்—நாம்: காம் + உறு = காமுறு.

காமுறுதல் = 1. விரும்புதல்.

"இன்பமே காமுறுவ ரேழையர்" (நாலடி. 60).

2. வேண்டுதல்.

கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ" (கலித். 16).

காம்—காமு—காமம். ஒ. நோ : விழு—விழும்—விழுமு—விழுமம். குழு—குழும்—குழுமு—குழுமம், பரு—பரும்—பருமு—பருமன்.

காமு—காமுகம்—காமுகன்—Skt. kamuka (காமுக்க).
காம்+மரு=காமரு—காமர்=விரும்பத்தக்க, அழகிய.
"காமர் கடும்புனல்" (கலித். 39). "காமர் கயல்புரள" (நளவெண்பா).

காம்+அர்=காமர்=காமுகர்.
காம்+இ=காமி=காமுகன்.
"களிமடி மானி காமி கள்வன்" (நன். 38).
காமி—Skt. kamin (காமின்).

காமித்தல்=1. விரும்புதல். ஒ. நோ: காதல்—காதலி.
"தப்புதி யறத்தை யேழாய் தருமத்தைக் காமியாதே" (கம்பரா. கிந்த. 54).

2. காமங்கொள்ளுதல்.

காமம்=கணவன் மனைவியரிடைப்பட்ட காதல், மணம். 'காமத்துப்பால்' என்னும் திருக்குறட் பகுதிப் பெயரை நோக்குக. சிவகாமி=சிவனைக் காதலிக்கும் மலைமகள்

ஒ. நோ: வேட்டல்=விரும்புதல், காதலித்தல்.
வேள்=திருமணம்.

காமம்—Gk. gamos (marriage), Skt. kama (காம).

காமம் என்னும் சொல் முதற்காலத்திற் பொதுவான ஆசையையே குறித்தது.

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்" (360)

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்" (605)

என்னும் குறள்களை நோக்குக.

பிற்காலத்தில், அச்சொல் காதல் என்னும் சொற்போல் ஆடவரின் பெண்ணாசையையும் பெண்டிரின் ஆணாசையையும் சிறப்பாய்க் குறிக்கலாயிற்று. அப்பொருளிலும், உயரிய இருதலைக் காமத்தையும் ஒருமனை மணத்தையுமே குறிக்க அது திருவள்ளுவரால் ஆளப்பெற்றது. ஆயின், இன்று, அது இடங்கழியையும் இணைவிழைச்சு விருப்பத்தையுமே குறிக்குமளவு இழிபடைந்துள்ளது.

காமம்—காமன்=மணக்காதல் உண்டாக்கும் தெய்வம், The Indian Cupid.

காமன்—Skt. Kama. (காம).

# சட்டத்தமிழ் இன்பம் சேர்ப்பீர்

[இ. சு. முத்துசாமி, எம். ஏ., பி. டி.]

எங்கிருந்தோ கொண்டுவரச் சொல்லவில்லை
இதயத்தின் உள்ளிருக்கும் தமிழ்மலர்ந்து
மங்காத கூர்வாள்போல் சொல்லாகி
மன்றத்தில் வழக்குரைக்கும் மாண்புடனும்
பொங்குதமிழ் நுட்பங்கள் பொலிவுடனே
நீதிகுல நாவினிலே நடுவுரையாய்
எங்கெவரும் புரியும்மணம் நீதிமுறை
செய்வதற்கு இங்குடனே பணிசெய்வீர். (க)

கலையுள்ளம் படைத்ததமிழ்ப் பெரும்புலவர்
கரைகண்டு சட்டத்தின் நெறியுணர்ந்து
நிலைகண்ட திட்டத்தால் தமிழாக்கம்
வழிகண்ட திருவனந்த நாராயணன்;
விலையில்லா மணியைப்போல் விளங்கறிவும்
கேள்வியெனும் கலையெழுப்பும் மொழித்திறனும்
அலைகடலாம் சட்டத்தை அளந்தறிந்த
கலையறிஞன் திருவரங்க ராசனென்பார்; (உ)

அமைச்சர்குலத் தவதரித்த அரும்புதல்வர்
ஆங்கிலநல் இலக்கியத்தில் அரும்புலவர்
தமிழறிந்த சட்டஞானி தகவுடைய
குணக்குன்றும் இராமலிங்கப் பெருந்தகையார்;
தமிழ்செறிந்த பரம்பரையின் வழித்தோன்றல்
தமிழகத்தில் வேளாண்மை விளங்கிற்பார்
தமிழ்த்துறையின் காவலராய்ப் புகழ்பரப்பும்
திறமைக்குச் சான்றான கார்த்திகேயன்; (௩)

ஆட்சிமொழித் தலைவராக அருப்பணிகள்
பலஇயற்றி எளிமைத்தமிழ் எடுத்தியம்பும்
மாட்சியுடன் ஓய்வுபெற்ற வெங்கடேசர்;
நம்சென்னைக் கலைக்கழகப் பேராசிரியர்
ஆக்கத்திறன் மிகப்படைத்த தமிழ்க்கலைஞர்
அன்புநெறிப் பண்பாளர் வரதராசன்;
பன்மொழியும் பல்கலையும் பல்லறிவும்
வாய்த்தபெரும் தமிழ்ச்சிங்கம் பன்மொழியார்; (௪)

சட்டத்தமிழ் ஆணைக்குழுச் செயலாளர்
இன்எளிமைத் தமிழ்ச்சட்ட நெறிவல்லார்
சட்டசபைத் துணைச்செயலர் சட்டநூலார்
சந்தத்தமிழ்ச் சிந்தினிலும் சால்புடையார்;
என்னுமிவர் இருந்திடினும் நீவிரெல்லாம்
எழுச்சியுடன் இப்பணியில் முனைந்திடுவீர்;
மின்னல்தன் வேகத்தில் உயர்ந்துசெல்லும்
சட்டமெனும் அறிவியலை அளந்துசொல்வீர். (ரு)

நுட்பங்கள் பலவுண்டு என்கின்றார்;
மதிநுட்ப முடையார்க்கு அதிநுட்பம்
சட்டத்தில் மட்டுமுண்டோ சற்றுமஞ்சோம்;
மூலத்தில் இல்லாத தெளிவினையும்
திட்பமுடன் தமிழ்மொழியில் வடித்தெடுப்போம்;
அறைகூவல் நமக்குத்தான், தமிழுக்கன்று;
வெட்கியேநாம் தலைகுனிந்த காலமாறி,
வெற்றிக்கொடி நாட்டுகின்ற வேளையிது. (சு)

விதிவகுத்த தீர்ப்பெல்லாம் தெரிந்தெடுத்து
விரைவினிலே தமிழாக்கம் செய்தல் வேண்டும்
விதிவகுக்கும் தீர்ப்பெல்லாம் அவ்வந்நாளில்
விளம்புதற்கு வாரஇதழ் மலரவேண்டும்
நிதிதிரட்டும் நோக்கமின்றிக் கலையுணர்வில்
அறிவியலைத் தமிழ்செய்யும் வீரர்வாரீர்;
எதுவரினும் அஞ்சுகின்ற நிலைமைமாறி
விதிதடுத்து நின்றாலும் விடுதலில்லை. (எ)

தமிழினிலே சட்டமென்றால் தட்டழிந்து
திணறலுடன் மொழிபெயர்த்த சவலையன்று;
தமிழ்மொழியின் திட்பமெல்லாம் திரண்டுருண்டு
ஒளிசிந்தும் கலைச்சொல்லாம் பொன்மலர்கள்;
எழிலுடனே வல்லமையும் இலங்கிடுமா;
வழிவகுக்கும் துணிவுடனே பணிகள்செய்வோம்
மொழியினிலே புதுமைபல படைத்திடுவோம்;
முற்றிலுமே வென்றியன்றி வேறொன்றில்லை. (அ)

---

# மக்கட் செல்வம்

[என். கே. வேலன், பி. ஏ.]

குழந்தை எந்த இனத்தைச் சேர்ந்ததாக இருப்பினும் அதனிடம் ஒரே வகையான பார்வை, சிரிப்பு, நம்பிக்கை, அன்பு முதலியவற்றைக் காணுகின்றோம். அதனிடம் ஆணவம் இல்லை; உற்றவர், மற்றவர் என்ற வேறுபாடும் இல்லை. ஞானிகள் குழந்தைகளைப்போல் கள்ளம் கபடமற்றவர்களாக இருப்பர்.

"பாலரொடு பேயர் பித்தர்
பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர் தம் செய்கை"

எனக் கூறப்படுகின்றது.

குழந்தையை ஒதுக்கி வைத்தாலும் அது தாயின் அன்பையே நாடி வருகின்றது.

"அரி சினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்
மற்று அவள்தன் அருள்நினைந்தே அழும்குழவி
அதுவே போலி ருந்தேனே"

என வருதல் காண்க.

குழந்தையின் அன்பு தன்னலம் அற்றது. அதன் வளர்ச்சிக்கு அன்பே அடிப்படையாக அமைந்திருக்கின்றது. அன்பு இல்லாவிடில் அதன் வளர்ச்சி குன்றி இறந்துபடும்.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு"

என்பது குறள்.

அன்னையின் வயிற்றில் வளரும் சிறிய குழந்தை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப் படுகின்றது. அது பூமியில் பிறந்தவுடன் சூழ்நிலைக்கு ஏற்றபடி தன் வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொண்டு மூச்சு விடவும் கற்றுக் கொள்கின்றது. அதனைக் காணும்போது இத்தனை சிறிய உடம்பில் உயிர் எப்படிக் குடிபுகுந்தது என வியப்படைகின்றோம். குழந்தையை உருவாக்கி உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரும் பணியை ஆண்டவன் நமக்கு அன்போடு அளித்திருக்கின்றான்.

ஓராண்டிற்குள் சிறு குழந்தை பலவகையான வித்தைகளைக் கற்றுக் கொள்கின்றது. உடல் வளர்ச்சியுடன் ஆன்ம வளர்ச்சி

யும் தொடர்ந்து நடைபெறுகின்றது. அன்னை குழந்தையின் பசிவேளை அறிந்து பாலூட்டித் தாலாட்டி வளர்க்கின்றாள். தாயின் அன்பு இயல்பாகவே வருகின்றது. ஆண்டவன் தமக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அருள் புரிகின்றான்.

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரியும்
செல்வமே சிவபெருமானே"

எனத் திருவாசகம் ஓதுகின்றது.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே"

எனவும்,

"அப்பன்நீ அம்மைநீ அன்புடைய
மாமனும் மாமியும்நீ"

எனவும், இறைவனைப் போற்றுகின்றோம்.

"கன்றினுக்குச் சேதா
கனிந்து இரங்கல் போல்எனக்கு
என்று இரங்குவாய்"

என உலகனைத்தையும் ஈன்ற அன்னையைக் கேட்கின்றோம்.

சிறு குழந்தை தவறி விழுந்து அடிபட்டுப் போகாமல் தாய் பாதுகாத்து வைக்கின்றாள். அடுத்தாற் போல் குழந்தை தந்தையின் அருளை நாடுகின்றது. குழந்தைக்கு உறுதி அளித்து நம்பிக்கை ஊட்டுபவர் தந்தை. மகிழ்ச்சியுடன் மகனைச் சான்றோன் ஆக்குபவள் தாய். கல்வியில் மேம்படச் செய்பவர் தந்தை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாக விளங்குகின்றனர்.

குழந்தை ஒவ்வொரு பொருளையும் புதிதாகக் கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றது. அறிவு வளர்ச்சிக்காக இவ் ஆராய்ச்சி அதனிடம் இயற்கையாகவே தோன்றுகின்றது. மணலில் ஓடி விளையாடும்போது, தன் காலடிகளைப் பற்றி ஆராய்ந்து பார்க்கின்றது. குளத்தின் கரையில் விளையாடும்போது மீனும், தவளையும், நிழல்களும் அதன் கண்களில் படுகின்றன. இயற்கை அற்புதங்களையும், பறவைகளையும், விலங்குகளையும் காணும்போதெல்லாம் அவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டே குழந்தை வளர்ச்சி அடைகின்றது.

குழந்தையின் கண்களில் நீர் வடிந்தாலும் அல்லது வாயில் விரலை வைத்தாலும் அதன் மனத்தில் ஏதோ குறை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

"உன் கண்ணில் நீர்வடிந்தால் என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி
உச்சிதனை மோந்தால் கருவம்
ஓங்கி வளருதடி"

எனப் பாரதியார் பாடுகின்றார். கண்கலங்கும் குழந்தையுடன் அன்போடு பேசி அதன் குறையைப் போக்க வேண்டும். அன்பும், ஆதரவும் காட்டினால் அதற்கு மன நிறைவு ஏற்பட்டு விடும்.

அழகிய பொருள்களைக் காண்பித்தால் குழந்தை மயங்கி விடுகின்றது. இயற்கைக் காட்சிகளிலும், ஓவியங்களிலும் அதன் மனத்தைத் திருப்பலாம். நிலவின் அழகினைக் காட்டி இன்னிசை பாடி மகிழ்விக்கலாம். பெருமக்களின் கதைகளைச் சொல்லி நாட்டுப் பற்றும், கடவுள் பற்றும் உண்டாகும்படி செய்யலாம். கோவிலுக்குப் போவது, வழிபாடுகள் செய்வது, அருட்பாடல்களைப் பாடுவது முதலியவற்றினால் குழந்தைக்கு மன அமைதி ஏற்படுகின்றது. அறிவாளிகளின் அருமையான வேலைப்பாடுகளையும், கலைத்திறனையும் சிறுவன் கண்டு களிப்படைகின்றான். வீரச் செயல்களைக் கண்டு வியப்படைகின்றான். நாட்டிற்காக உயிரை அளித்த வீரர்களைப் பாராட்டுவதையும் கொடி வணக்கம் செய்வதையும் கண்டு நான் ஒரு தமிழன் என்று மார்தட்டுகிறான்.

"தமிழனென்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா"

எனப் பாடுகின்றான்.

பள்ளியில் தன்னைப் போன்ற குழந்தைகளைக் காணும் போது கல்வியில் ஆர்வம் உண்டாகின்றது. விளையாடுவதற்கு நேரமும் அதற்கேற்ற இடமும் கிடைத்துவிட்டால் மற்றவர்களோடு பழகுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. விளையாட்டினால் உடல் வலிவடைந்து மனம் தெளிவுபடுகின்றது.

"ஓடிவிளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"

என்றபடி அஃது ஓயாமல் விளையாடுகின்றது. விளையாட்டில் முயற்சி செய்து வெற்றியும் அடைகின்றது. வாழ்க்கையில் வெற்றி காண்பதற்கு விளையாட்டு வழிகாட்டியாக இருக்கின்றது.

தம் மக்களே தம்முடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர்.

"தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்"

என்பது குறள். நல்ல பண்புடைய மக்களைப் பெறுவது சிறந்த பேறாகக் கருதப்படுதலால் குழந்தையைத் தெய்வம்போல் போற்றி வளர்க்க வேண்டும். முருகப் பெருமானையும், கண்ணபிரானையும் குழந்தை வடிவத்தில் வைத்து வணங்குகின்றோம். பிள்ளைத் தமிழ் பாடி வா, வா என வருந்தி அழைக்கின்றோம். நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்பதை உணர்ந்து விட்டால் நம் தொல்லைகள் நீங்கி நன்மை ஏற்படும்.

---

## அடிகளாரைப் பற்றி அறிஞர்கள் கருத்துரை

தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகளுக்கு உண்டு. அவர்தம் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும், தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும் மரமும் முழங்கும்.

—திரு. வி. கலியாணசுந்தரனார்,
அணிந்துரை "மறைமலையடிகளார்மாட்சி."

தமிழுக்காகவே பிறந்து, தமிழுக்காகவே வாழ்ந்து, தமிழுக்காகவே உயிர் நீத்தவர் அடிகள் ஒருவரே யாவர். இத்தகைய சிறந்த அறிஞரைத் தமிழ் நாட்டு மக்களிற் பலர் அறிந்து கொள்ளவேயில்லை. வாழ்ந்தபோது அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி வாழத் தவறிய மக்கள், அவர்கள் (அடிகள்) மறைந்த பிறகேனும் தங்கள் தவறை உணர்ந்து, அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி வாழ்ந்தாக வேண்டும். இன்றேல் நாடு வாழாது.

—முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

இனி எக்காலும் தமிழ் இறவாதிருக்க வேண்டுமானால் மறைமலையடிகள் திருவடிகளைத் தமிழர் மறவாதிருக்கவேண்டும்.

—டாக்டர், ரா. பி. சேதுப்பிள்ளை.

---

## ஆர்வம் வெறியானால்....?

"சர்வதேச நிலவர ஆய்வுக் கழகம்" என்ற நிறுவனம் டில்லியில் இருக்கிறது. உலக விவகாரங்களை ஆராயும் மன்றமாதலால் மற்ற உயர் படிப்பு நிலையங்களைப் போன்று அங்கு ஆங்கிலத்திலேயே பாடபோதனை நடக்கிறது. மாணவரும் ஆங்கிலத்திலேயே விடையளிக்கின்றனர். அதில் சேர்ந்துள்ள ஒரு மாணவர் மட்டும் இந்தியில்தான் பேசுவேன் - விடை எழுதுவேன் என்று அடம் பிடிக்கிறார். அவருடைய போஷகர் ஒரு பார்லிமெண்ட் மெம்பர். அந்த வசதியைப் பயன்படுத்தி, அம் மாணவரை ஒரு 'மொழித் தியாகி'யாக்கவும் ஆய்வுக் கழக ஆசிரியரையும் நிர்வாகத்தையும் பழிக்கவும் முயற்சி செய்யப்படுகிறது. கழகத்துக்கு மத்திய சர்க்கார் மான்யம் வழங்குகிறது என்ற காரணத்தைக் கொண்டு இவ்விஷயம் மூன்று மாதங்களில் 4 முறை பார்லிமெண்டில் கிளப்பப்பட்டது. அரை மணிநேர விவாதம்கூட நடந்தது.

"தனி யொருவரின் பிரச்சினையை அம்பலம் ஏற்றக் கூடாது. கொள்கைத் தொடர்பான விஷயத்தையே பார்லிமெண்டில் கிளப்பவேண்டும் என்ற மரபுக்கோ அல்லது இம்மாதிரி விவாதங்களினால் கழகத்தின் நற்பெயர் மாசுபட்டு, அதன் நிர்வாகிகளும் ஆசிரியரும் உற்சாக மிழப்பர் என்ற அம்சத்துக்கோ ஹிந்தி வெறியர்கள் மதிப்புக் கொடுக்கவில்லை. இந்தி பரவுவது முக்கியமா, அல்லது கல்வித்தரம் பாதுகாக்கப்படுவது முக்கியமா? என்று ஒரு தி.மு.க. உறுப்பினர் பொருத்தமாகச் சபையில் வினவினார். ஆர்வம் வெறியாக மாறும்போது, மற்றவர்கள் அதைச் சகித்திருக்க மாட்டார் என்பதை ஹிந்தி பிரியர்கள் உணர வேண்டும்."

—மித்திரன், 17-11-66.

---

## 14-வது தமிழ் எழுத்தாளர் மாநாடு

4-12-66இல் மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் 14 ஆவது தமிழ் எழுத்தாளர் மாநாடு சிறப்புற நடைபெற்றது. அமைச்சர் திரு. பக்தவத்சலம், டாக்டர் மு. வ. மயிலை சீனி வேங்கடசாமி, எ. ஜி. வெங்கடாச்சாரி, அழ வள்ளியப்பா, டி. கே. சண்முகம், எஸ். டி. சுந்தரம் ஆகியோர் அரிய கருத்துரை வழங்கினர். எழுத்தாளர் சங்க வெளியீடான "யார் எவர்?" என்னும் நூலை அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்டார்கள். விக்டர் மீனின் என்னும் ரஷியர் தமிழில் உரையாற்றினார்

---

# செய்திகளும் குறிப்புக்களும்

**கேரளத்தில் 'இந்தி' ஏன்?—கேட்கின்றனர் மாணவர்**

கல்லூரிப் பாடமொழியாக ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை வைக்கவேண்டும் என்று கேரளப் பல்கலைக் கழக ஆட்சி மன்றம் (Syndicate) அண்மையில் முடிவு செய்திருந்தது. இதனை அப்பல்கலைக் கழக மாணவர்கள் விரும்பவில்லை. மலையாளம் பாடமொழியாக இருக்க வேண்டும், அல்லது உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பது அவர்கள் குறிக்கோள். எனவே ஆட்சி மன்ற முடிவை எதிர்த்துப் பதிவாளர்க்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். அத்துடன் நில்லாது 29.11.66இல் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஊர்வலமே நடத்தினர். "நாங்கள் ஆங்கிலம் படிப்போம்" "நாங்கள் மலையாளம் படிப்போம்" "இந்தி எங்களுக்குத் தேவையில்லை." என்று அம் மாணவர்கள் முழங்கினராம்.

இந்திக்குச் சலுகை காட்டிய பல்கலைக் கழகம் இக் கிளர்ச்சி கண்டு சிந்திக்க ஆரம்பித்துள்ளது. "இந்தியைப் பாடமொழியாக்க நினைக்கின்றோமே தவிர அதனை இன்னும் நிலைநாட்டவில்லை" என்று மாணவர்களுக்குப் பல்கலைக் கழகப் பதிவாளர் பதில் கூறினாராம்.

குறிப்பு: உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் இருக்க அரசினர் இந்தியைப் பரப்பும் வேண்டாத திட்டத்தில் ஈடுபட்டிருப்பது அனைவரும் அறிந்த செய்தி. ஆனால் ஒரு பல்கலைக் கழகம் தானே முனைந்து இந்திக்கு ஏற்றந்தர நினைக்குமானால் இது மிகமிக வருந்தத் தக்கது; அதிலும் தென்னகத்தைச் சேர்ந்த கேரளப் பல்கலைக் கழகம் இப்பணியில் நாட்டம் செலுத்துகின்றதெனில் அது மிகமிக இரங்கத் தக்கது. இந்தி மிகுதியாக வழங்கும் வடநாட்டில் இம் முயற்சி ஓரளவு ஏற்புடைத்தாகும். ஆனால் கேரளத்தில் ஏன் இந்தி? எனவேதான் இந்தி ஆதிக்கத்துக்கு இடங் கொடோம் என்று கேரள மாணவர்களே இந்தி எதிர்ப்புப் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

எனவே கேரளப் பல்கலைக் கழகம் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து இந்திக்கு ஏற்றந்தர நினைக்கும் பொருந்தாத செயலைக் கைவிட்டு மாண்புமிக்க மாணவர்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து, மாநில மொழியாம் மலையாளத்தைவாழவைத்து—அனைத்துலக மொழியாம் ஆங்கிலத்தை அரவணைத்து ஆக்கவேலையில் ஈடுபடுமென எதிர்பார்க்கின்றோம். இதே நேரத்தில் கேரளப் பல்கலைக் கழக மாணவர்களின் தாய்மொழிப் பற்றையும் எழுச்சியுள்ளத்தையும் பாராட்டுகின்றோம். அம் மாணவர்கள் வன்முறையில் இறங்காமல் சனநாயக முறையில் அறப்போர் செய்து தமது குறிக்கோளை அடைய முயல்வார்களாக.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.